பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 08 திங்கட்கிழமை (21-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:146

## கடற்புலிகளுக்கு கடலில் தனியான பயிற்சிக் களம்?

### கண்காணிப்புக்குழு சிபாரிசு

கொழும்பு,ஏப்.21

வடக்கு - கிழக்கு கடற்பரப்பில் கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மோதல்கள் போன்ற விரும்பத்தகாத சம்பவங்களை எப்படித் தவிர்ப்பது என்பது தொடர்பாக நடைபெறவிருக்கும் முத்தரப்பு மாநாட்டில் பரிசீலிப்பதற்கான சிபாரிசுகளை கண்காணிப்புக்குழு தயாரித்துள்ளது.

இந்த மாநாட்டில் பரிசீலனைக்கென்று சர்வதேச கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் டரைக்வி டெலிவ்சன் பல்வேறு யோசனைகள் அடங்கிய செயற்றிட்ட அறிக்கை ஒன்றைத் தயாரித்து அரசாங்க சமாதான செயலகத்தின் மூலம் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பி வைத்திருக்கிறார்.

அவரின் யோசனைகளின்படி விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் பிரிவை அவர்களின் படை அணிகளின் ஓர் அங்கமாக அங்கீகரித்து அவர்களது ஆளுமைக்கு உட்பட்ட கடற்பரப்பை வரையறை செய்து அப்பகுதியில் அவர்கள் கடற்பயிற்சியில் ஈடுபடுவதை அனுமதிக்க வேண்டும் -

அவ்வாறான பயிற்சியின்போது கடற்படையினரின் சார்பில் பார்வையாளர்கள் சிலர் வந்து பயிற்சியை அவ

(12ஆம் பக்கம் பார்க்க)

### 50 வருடங்கள் மருத்துவ சேவை புரிந்த

## டாக்டர் கெங்காதரனுக்கு தலைவர் பிரபா கௌரவம்

கிளிநொச்சி,ஏப்.21

பிரபல புல்லாங்குழல் இசை விற்பன்னரும் வைத்தியக் கலாநிதியுமான கெங்காதரனை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நேற்று பாராட்டி கௌரவித்தார்.

தனது 50 வருட கால மருத்துவ சேவையைப் பூர்த்தி செய்துள்ள வைத்திய கலாநிதி கெங்காதரனுக்கு தேசியத் தலைவர் வன்னியில் நேற்று நினைவுப் பரிசில் வழங்கிக் கௌரவித்தார் என்று விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

இதுதொடர்பாக விடுதலைப் புலிகள் விடுத்திருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வைத்தியக் கலாநிதி கெங்காதரன் அவர்கள் மருத்து (12ஆம் பக்கம் பார்க்க)

# மூதூரில் மோதல்கள் இல்லை எனினும் பதற்றம் நீடிக்கிறது

## பாதுகாப்பு ஏற்பாடு தீவிரம்; ஊரடங்கு தொடர்ந்து அமுல்

மூதூர்,ஏப்ரல்21

**மூதூரில் நேற்று புதிதாக பெரிய மோதல் சம்பவங்கள் எங்கேயும் நடைபெறவில்லை. என்றாலும் பதற்றம் நீடிக்கிறது. இயல்பு நிலை ஏற்படவில்லை. எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்ற அச்ச உணர்வுடனேயே மக்கள் காணப்படுகின்றனர். ஊரடங்குச் சட்டம் நேற்றும் முழுநாளும் அமுலில் இருந்தது. பாதுகாப்பு ஏற்பாடுகள் ஐருராக மேற்கொள்ளப்பட்டிருந்தன.**

அமைதி நிலையைப் பேண பெருமளவில் பொலிஸாரும் படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்கு நேற்றுக்காலை 6 மணிக்கு நீக்கப்பட்டு மீண்டும் நேற்று மாலை 4 மணிக்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

கலவரங்கள் காரணமாக இடம் பெயர்ந்த சுமார் 2 ஆயிரம் தமிழ், முஸ்லிம் மக்கள் தமது இருப்பிடங்களுக்கு திரும்ப விரும்பாது தொடர்ந்து இடம்பெயர்ந்த இடங்களிலேயே தங்கியிருந்தனர்.

கூட்டுறவுக்கடைகள், தனியார் கடைகள் என்பன மூடப்பட்டிருந்ததால் உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களைப் பெறுவதில் சிரமம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க பிரதேச செயல

(12ஆம் பக்கம் பார்க்க)



மருத்துவசேவையில் ஐம்பது வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள டாக்டர் கெங்காதரனுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் நினைவுப் பரிசில் வழங்கி கௌரவித்த போது எடுக்கப்பட்ட படம்.

## ஊர்காவலரின் சூட்டுக்கு இளைஞன் பலி!

மன்னார்,ஏப்.21

மன்னாரில் அருவியாறு என்னும் இடத்தில் நேற்று முஸ்லிம் ஊர்காவலர் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உழவுஇயந்திரத்தில் மண் ஏற்றி வந்த இளைஞர் ஒருவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தார்.

அருவியாற்றைச் சேர்ந்த பீற்றர் (வயது28) என்பவரே உயிரிழந்தவர் என்று அடையாளம் காணப்பட்டது.

இச்சம்பவம் குறித்து யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்படவுள்ளது. (ஐ-3)

## கூட்டமைப்பினருடன் புலிகள் சம்பூரில் கலந்துரையாடல்

மூதூர்,ஏப்.21

மூதூரில் தற்சமயம் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை தணிக்கும் முயற்சியாக தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று மாலை சம்பூரில் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், என்.துரைரட்ணசிங்கம், விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட தளபதி கேணல் பதுமன், அரசியல்துறைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியை ஏற்படுத்த முயற்சி திருமலையில் இன்று கூட்டம்

திருகோணமலை,ஏப்.21

திருகோணமலை மற்றும் மூதூர்ப் பகுதிகளில் இடம்பெற்று வரும் மோதல்கள் மற்றும் கலவரங்களைத் தடுத்து நிறுத்தி தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் இன்று திருகோணமலையில் முத்தரப்பு சந்திப்பு ஒன்று இடம்பெறவிருக்கின்றது.

அமைச்சர் ஹக்கீம் உட்பட கிழக்கு மாகாண எம்.பிக்கள், விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மற்றும் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் ஆகிய முத்தரப்பினர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றவுள்ளனர்.

இந்தக் கூட்டம் சம்பூரில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - நேற்று நடப்பதாக இருந்தது. பின்னர் அது இடம்மாற்றப்பட்டு இன்று திருமலையில் நடக்கும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

புலிகளின் திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் தலைமையில் புலிகளின் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவர். (ஐ-3)

## போர் மூண்டால் வெளிநாடுகள் உதவும்

கொழும்பு,ஏப்.21

மீண்டும் போர் மூண்டால் பல நாடுகள் இலங்கை அரசிற்கு சகல வழிகளிலும் உதவும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று அநுராதபுரத்தில் இடம்பெற்ற சமாதான நடவடிக்கை தொடர்பான கருத்தறிதல் கருத்தரங்கொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏழாம் கட்டப் பேச்சுகள் ஒத்திவைக்கப்படலாம்?

லண்டன்,ஏப்.21

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான 7ஆம் கட்டப்பேச்சு எங்கு, எப்போது நடக்கும் என்பது குறித்துத் திட்டவட்டமான தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

இந்தப் பேச்சுகளை ஏப்ரல் 29 முதல் மே 2 வரை தாய்லாந்தின் நொக்கம் பத்தோம் நகரில் நடத்த முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், தாய்லாந்தை அண்டிய பிரதேசங்களில் 'சார்ஸ்' நோய் பரவி வருவதால் பேச்சு நடக்கும் இடத்தை அங்கிருந்து வேறு ஒரு மேற்குலக நாட்டுக்கு மாற்றலாம் என்று கருதப்பட்டது.

ஆனால், இப்போது பேச்சு நடைபெறும் காலமும் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக ஊறுதிப்படுத்தப்படாத செய்திகள் தெரிவித்தன.

பேச்சுக்களில் அரசுத் தரப்புக் குழுத் தலைவராகப் பங்குபற்றும் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் லண்டனில், புலிகளின் பேச்சுக் குழுத் தலைவரும் மதியுரைஞருமான அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசியதாகக் கூறப்படுகிறது.

அதை அடுத்தே ஏழாவது சுற்றுப் பேச்சை ஒத்திவைப்பது என முடிவெடுக்கப்பட்டதாக செய்தி ஏஜென்சி ஒன்று தகவல் வெளியிட்டது. (ஐ-3)

## சுமுகநிலைமை ஏற்படும்வரை ஹக்கீம் திருமலையிலேயே தங்கியிருப்பாராம்!

திருகோணமலை,ஏப்.21

மூதூர் கலவரங்களை அடுத்து ஏற்பட்டுள்ள பதற்ற சூழ்நிலை மாறி, பாதுகாப்பு நிலை சீரடைந்து, சுமுக நிலைமை ஏற்படும்வரை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தொடர்ந்து திருகோணமலையிலேயே தங்கியிருப்பார். அவரது அமைச்சு நேற்றுமுன்தினம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கலவரத்தால் ஏற்பட்ட இழப்பீடுகள் தொடர்பாக மதிப்பீடுகள் செய்யப்பட்டு அதற்கான கொடுப்பனவுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்படும்வரை அமைச்சர் திருகோணமலையிலேயே தங்கியிருப்பார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்றை அவர் நேற்று

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜமாலியாவில் கிரனேட் வீச்சு! 6 பேர் காயம்!! அதை அடுத்துத் திருமலையிலும் ஊரடங்கு அமுல்

கொழும்பு,ஏப்.21

திருகோணமலை ஜமாலியாவில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் இரு கோஷ்டியினருக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைக்குண்டு வீச்சில் முடிந்தது. இதனால் நான்கு சிறுவர்கள் உட்பட அறுவர் காயமடைந்தனர். காயமுற்ற சிறுவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து திருகோணமலை நகரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நேற்றிரவு 7 மணிமுதல் இன்று அதிகாலை 7 மணி வரை ஊரடங்கு உத்தரவு நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

திருமலை அலஸ்தோட்டம், பாலையூற்று, ஜமாலியா பகுதிகளிலேயே ஊரடங்கு முழு அளவில் - மிகக் கடுமையாக - நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றது. அங்கு படையினரும், பொலீஸாரும் அதிக எண்ணிக்கையில் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஜமாலியாவில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தை அடுத்து அங்கு உடனடியாக விரைந்த திருகோணமலைப்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கிழக்குக் கரையோர முஸ்லிம் பிரதேசத்தில் ஹர்த்தால் அழைப்பு நேற்றுப் பிசுபிசுப்பு

கல்முனை,ஏப்.21

மூதூர் சம்பவங்களைக்காட்டி அம்பாறை மாவட்டத்தின் கரையோர முஸ்லிம் பிரதேசங்களில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஹர்த்தால், கடையடைப்பு மேற்கொள்ளும்படி ஒருசில குழுவினரால் அழைப்பு விடுக்கப்பட்டது.

எனினும் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள், பொலீஸார் ஆகியோர் இந்தக் ஹர்த்தால் கடையடைப்புக்கு எதிராக விடுத்த அறிவித்தலை அடுத்து ஹர்த்தால் முயற்சி பிசுபிசுத்துப்போனது.

ஹர்த்தாலுக்கு எதிராக ஒலிபெருக்கி மூலம் பொலீஸார் ஆங்காங்கே அறிவிப்பு விடுத்தவண்ணம் இருந்தனர்.

ஹர்த்தால் அழைப்பை நிராகரிக்கும்படி அனைத்துப் பள்ளிவாசல்களிலும்கூட ஒலிபெருக்கி மூலம் அறிவிப்புச் செய்யப்பட்டது.

கல்முனை நகரத்திலும், சந்தையிலும் வழமைநிலை நேற்று ஓரளவு பாதிக்கப்பட்டிருந்த போதிலும், அநேகமான கடைகள் திறந்திருந்தன.

நகரில் பெரும் எண்ணிக்கையான பொலீஸார் ஆயுதங்களுடன் குவிக்கப்பட்டிருந்தனர். ரோந்து நடவடிக்கையும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

காலை 10.00 மணிக்குப் பின்னர் கல்முனை நகர வீதிகளில் வழமையான வாகனப் போக்குவரத்து இடம்பெற்றது. எனினும், கல்முனையிலிருந்து அம்பாறை, அக்கரைப்பற்று போன்ற இடங்களுக்கான தனியார் பஸ் சேவை எதுவும் இடம்பெறவில்லை. போக்குவரத்துச் சேவைக்கான பஸ்கள் அம்பாறைக்கான சேவையில் ஈடுபட்டன.

ஆனால், கல்முனை - மட்டக்களப்பு பஸ்சேவை எதுவித பாதிப்புமின்றி வழமைபோல நடந்தது.

அம்பாறை மாவட்ட தமிழ்க்கிராமங்கள் அனைத்தும் வழமைபோன்று இயங்கின.

சாய்ந்தமருது, கல்முனைக்குடி, மருதமுனை, அட்டாளைச்சேனை, சம்மாந்துறை ஆகிய முஸ்லிம் கிராமங்களிலும் வர்த்தக நிலையங்கள், கடைகள் யாவும் திறக்கப்பட்டிருந்தன. ஆனால், அக்கரைப்பற்றிலும் பல கடைகள் மூடப்பட்டிருந்தன.

காத்தான்குடி நகரசபைப்பிரிவிலும் ஹர்த்தால் ஓரளவு அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள் மூடப்பட்டிருந்தன. எனினும், போக்குவரத்துச் சேவைகள் ஓரளவு இடம்பெற்றன. ஆனால், காத்தான் குடியிலிருந்து செல்லும் வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடவில்லை.

கடைகளைத் திறக்குமாறு பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஒலிபெருக்கி மூலம் அறிவித்த போதிலும் காத்தான்குடியில் அதற்கு அதிகமானோர் செவிசாய்க்கவில்லை. நகரில் இராணுவ பொலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

மூதூர்ச் சம்பவத்தைக் கண்டித்து அம்பாறை மாவட்ட முஸ்லிம் பகுதிகளில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு வடக்கு - கிழக்கு முஸ்லிம் சகோதரத்துவ ஒன்றியம் துண்டுப் பிரசுரம் மூலம் அழைப்பு விடுத்திருந்தது. (ஐ)

# கூட்டத்தில் உரையாற்றிவிட்டு அமர்ந்ததும் புத்தளம் நகர பிதா மயங்கிச் சாய்ந்தார்

புத்தளம்,ஏப்.21

வைபவம் ஒன்றில் உரையாற்றிவிட்டு அமர்ந்த புத்தளம் நகர பிதா ஏ.எம்.எச்.ஹுசைன் திடீரென மயக்கமுற்று சரிந்தார். சுகவீனமுற்ற அவர் உடனடியாக புத்தளம் தளவைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் புத்தளம் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் புத்தளம் இணைப்பாளர் அலுவலகமும் மனித உரிமைகள் நிறுவனமும் இணைந்து நடத்திய இலவச சட்ட உதவி பற்றிய கலந்துரையாடல் புத்தளம் நகர மண்டபத்தில் அன்று இடம்பெற்றது.

அந்நிகழ்வில் புத்தளம் நகரபிதா கலந்து கொண்டு சிறிது நேரம் உரையாற்றி விட்டு தனது இருக்கையில் அமர்ந்தபோதே அவர் மயக்கமுற்றார்.

அவர் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலைக்கு விரையப்பட்டு அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். கடந்த மாதம் 29 ஆம் திகதி புத்தளம் நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் கலந்துகொண்டிருந்த போது பொலீஸாரின் தாக்குதலுக்கு அவர் உள்ளாகியதையடுத்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். நீண்டகாலம் சிகிச்சை பெற்ற அவர் சில தினங்களுக்கு முன்னரே வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பியிருந்தார்.

இவரைக் கூட்டங்களில் 5 நிமிடங்களுக்கு மேல் உரையாற்றக் கூடாது என வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியிருந்தனர். எனினும், அன்றைய நிகழ்வின் குறிப்பிட்ட நேரத்தை விடவும் சற்று அதிக நேரம் அவர் உரையாற்றினார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பல்கலைக்கழக மாணவர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.21

யாழ்பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்கான (முதலாம் வருட மாணவர்கள் தவிர்ந்த) அவசர கலந்துரையாடல் இன்று முற்பகல் 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட சகல பீட மாணவர்களையும் தவறாது பங்குபற்றுமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (ஐ-3)

# அன்னை பூபதி நினைவுதின விளையாட்டு விழாவில் நடுவர்களாக விசேட அதிரடிப்படை அதிகாரிகள்!

காரைதீவு,ஏப்.21

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னுயிரை நீத்த அன்னை பூபதியின் 15 ஆவது ஆண்டு நினைவு தின விளையாட்டு விழாவில் இலங்கை விசேட அதிரடிப்படை அதிகாரிகள் நடுவர்களாகக் கடமையாற்றினர்.

இவ்விழா தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

மென்பந்து மற்றும் காற்பந்து சுற்றுப் போட்டிகளின் இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு நடுவர்களாகத் திருக்கோவில் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளான டி.சில்வா, கே.சனத் ஆகியோர் கடமையாற்றினர்.

திருக்கோவில் பிரதேச தமிழீழ விடுதலைப் புலிகளின் பொறுப்பாளர் வீரமணி, அதிரடிப்படை அதிகாரிகளை வரவேற்றார்.

கிரிக்கெட் இறுதிப்போட்டியில் அட்டாளைச்சேனை சுப்பர்சோனிக் விளையாட்டுக்கழகமும், திருக்கோயில ரேஞ்சர்ஸ் கழகமும் மோதின.

இப்போட்டியில் திருக்கோயில் ரேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கால்பந்து சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் திருக்கோயில் சுப்பர் ஸ்ரார் அணியும் விநாயகபுரம் மின்னொளி அணியும் மோதின.

இப்போட்டியில் 2 - 0 என்ற கோல வித்தியாசத்தில் சுப்பர் ஸ்ரார் அணி வெற்றியீட்டியது. (ஐ)

# ஜேர்மனியில் இருந்து வந்தவர் முகமாலையில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.21

ஜேர்மனியிலிருந்து நாடு திரும்பிய பருத்தித்துறை வாசி ஒருவர் கொழும்பிலிருந்து ஏ-9 வீதியூடாக வரும் வழியில் உயிரிழந்தார்.

முகமாலை சோதனை நிலையப் பகுதியில் காணப்பட்ட இவரது சடலம் அங்கிருந்து பளை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு பின்னர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டது.

பருத்தித்துறை பன்னக்கட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த நடராசா திருக்கேதீஸ்வரன் (வயது 43) என்பவரே இறந்தவர் ஆவார். இவரது சடலத்தை உறவினர்கள் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அடையாளம் காட்டினர்.

வேலை வாய்ப்புத் தேடி ஜேர்மனிக்கு சென்றிருந்த இவர் சுமார் இருபது ஆண்டுகளின் பின்னர் நாடு திரும்பியிருந்தார் என்றும் இவரது மனைவியும் இரு பிள்ளைகளும் ஜேர்மனியில் வசிப்பதாகவும் கூறப்பட்டது. (ஐ-15)

## வடக்கு - கிழக்கு கடலில் நுழையும்

# இந்திய மீனவரைக் கைதுசெய்து கடும் நடவடிக்கை எடுக்குக!

## சட்டமா அதிபர், பிரதிப் பொலீஸ்மா அதிபர்களுக்குப் பணிப்புரை

கொழும்பு,ஏப்.21

வடக்கு - கிழக்குக் கடற்பரப்பில் ஊடுருவி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களை உடன் கைதுசெய்து, அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி சட்டமா அதிபர் கே.ஸி. கமலசபேசன், வடக்கு - கிழக்கு பிரதிப் பொலீஸ்மா அதிபர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அண்மைக்காலமாக இலங்கைக் கடற்பரப்பினுள் ஊடுருவும் இந்திய மீனவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதோடு, இலங்கை மீனவர்களின் வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களைச் சேதமாக்கி வருவதும் தெரிந்ததே.

இதுதொடர்பாக மீனவர் சங்கங்கள் தெரிவித்த முறைப்பாடுகளை அடுத்து பொலீஸாருக்கு அவர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

அத்துமீறிவரும் இந்திய மீனவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கும்படியும் அவர் தனது பணிப்புரையில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் - இலங்கைக் கடற்பரப்பினுள் ஊடுருவும் மீனவர்கள் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டதும் - இந்திய அதிகாரிகளின் கோரிக்கையின் பேரில் தண்டனை ஏதும் இன்றி அவர்கள் விடுதலை செய்யப்படுவது வழமை என்றும் - சுட்டிக் காட்டப்படுகின்றது. (எ-3)

# விடுதலைப் போரின் விரோத சக்திகளுக்கு எதிராக மேதினத்தில் அணிதிரள்வோம்!

## கூட்டணி எம்.பி.மாவை சேனாதிராசா அறைகூவல்

யாழ்ப்பாணம்,ஏப்.21

பேரினவாதிகளுடன் இணைந்து தமிழ் மக்களின் போராட்டத்தை சீர்குலைக்கும் தேச விரோத சக்திகளுக்கு எதிராக மேதினத்தில் அணிதிரள்வோம் - இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

தந்தை செல்வா நினைவுதினம் மற்றும் மேதினக் கொண்டாட்டம் பற்றிய ஆலோசனைக் கூட்டம் நேற்றுக் காலை யாழ்ஸ்ரான்லி வீதியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தந்தை செல்வா அகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து மாவை எம்பி. மேலும தெரிவித்ததாவது:-

சுய நிர்ணயம், தமிழ்த் தேசியம், ஆட்சியுரிமை என்ற அடிப்படையில் இன்று விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தப் பேச்சுக்களை குழப்புவதற்கு பேரினவாத சக்திகளுடன், தேச விரோதக் குழுக்களும் இணைந்து செயற்படுகின்றன. இவர்களுடைய இத்தகைய செயற்பாட்டை முறியடிக்கும் வகையில், மேதினத்தில் அனைத்து மக்களும் ஒன்றுதிரண்டு எமது ஒற்றுமையை சர்வதேச உலகுக்கு எடுத்துக்காட்டவேண்டும்.

எமது இலக்கினை அடைவதற்கு தனிநபர்களின் சிந்தனைகளுக்கு அப்பால் - கட்சி நலன்களுக்கப்பால் - நின்று நாம் செயற்படவேண்டும். தந்தை செல்வா வகுத்துத்தந்த அந்த இலட்சியம் தற்போது நிறைவேறும் நிலையில் உள்ளது. எமக்குள் பல் வேறுபட்ட கருத்து முரண்பாடுகள் காணப்படலாம். எனினும், ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமாக இருந்தால் நாம் அவற்றை எல்லாம் மறந்து ஒன்றுபட்டு செயற்படவேண்டும். அப்போதுதான் எமது ஒற்றுமையைப் பார்த்து அந்நியப் படைகள் நடுங்கும்.

எதிர்வரும் மேதினத்தில் அனைத்து அரசியற் கட்சிகளினதும் பங்களிப்பு முக்கியமானது. இத்தினத்தில் தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைப் போராட்டத்திற்கு குரல் கொடுப்பது மட்டுமன்றி - இனத்தின் விடுதலைக்காகவும், தேசத்தின் விடுதலைக்காகவும் குரல் கொடுக்கப்படவேண்டும். அத்துடன் யுத்த நடிவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமரவும், அந்த நிலங்களை உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் முடக்கி வைத்திருக்கும் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராகவும் குரல் எழுப்பவேண்டும்.

தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் பெறவேண்டிய அனைத்தையும் போராடித்தான் பெறவேண்டும் என்ற நியதி காணப்படுகின்றது. எமது மக்கள் போராட்டத்திற்கும், ஒற்றுமைக்கும் எப்பொழுதும் ஆதரவளித்து வருபவர்கள்.

கடந்த காலங்களில் சந்திரிகா அரசு தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தை சர்வதேச ரீதியில் பயங்கரவாதப் போராட்டம் என முத்திரை குத்துவதற்கு விளைந்தபோது; அரசியற் கட்சிகளைச் சேர்ந்த நாம் ஒன்று திரண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கி, அதன்மூலம் விடுதலைப் புலிகள் பயங்கரவாதிகள் அல்லர் என்பதனையும் -

அவர்களால் மேற்கொள்ளப்படும் போராட்டம் விடுதலைக்கும் உரிமைக்குமான போராட்டம் என்பதையும் -

தேசத்திற்கு எடுத்துக் கூறினோம். இதற்கு மக்களும் எமக்கு ஆதரவு தந்தார்கள்.

தமிழ் மக்களுடைய பிரச்சினையின் ஓர் அங்கமாக ஆயுதப் போராட்டம் இருந்து வருகிறது. மறுபுறத்தில் ஜனநாயக ரீதியான போராட்டம் உந்து சக்தியாக விளங்குகின்றது. இந்த இரண்டின் மூலம் தமிழர்களின் தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வைக்காண முடியும்.

சர்வதேச நாடுகள் எமது பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக தீர்வு காண வேண்டும் என வலியுறுத்துகின்றன. அத்துடன் ஆயுதப் போராட்டம் இனி மேலும் தொடராமல் இருப்பதற்கு பல்வேறு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன.

உலக நாடுகளைப் பொறுத்தவரையில் அவற்றை முற்றுமுழுதாக நம்பி விட முடியாது. எப்போது எங்கு திரும்பும் என்றும் - கூறிவிடமுடியாது. இதனால்தான், இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையில் எமது போராட்டத்தை அழியவிடாது கட்டிக்காக்க வேண்டிய உரிமை சகல தரப்பினருக்கும் உண்டு.

சமாதானம் நிலவுகின்ற இக்கால கட்டம் மிகவும் ஆபத்தானது. இத்தகைய சூழ்நிலைகளில்தான் இராணுவ ரீதியாக உளவாளிகள் ஊடுருவி எமக்குள் ஏற்பட்டுள்ள ஒற்றுமையைச் சீர்குலைத்து, சமுதாயத்தை சீரழிக்க முயற்சிப்பார்கள். இதனால் நாம் மிகவும் அவதானமாக செயற்படவேண்டும்.

ஒரு காலகட்டத்தில் எமது ஒற்றுமையைப் பார்த்து பேரினவாதிகளும், சர்வதேச சமூகமும் வியப்படைந்தன. ஆனால், அண்மைக்காலமாக எமக்குள் காணப்படுகின்ற கருத்து முரண்பாடுகள் எமக்குள் பிளவை ஏற்படுத்தியுள்ளதாக தென்பகுதியில் பிரசாரம் செய்யும் அளவுக்கு வளர்ந்துள்ளதை எண்ணும்போது மனம் மிகவும் வேதனை அடைகிறது.

தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் வெற்றிபடைய வேண்டும். அது பலவீனமடையக்கூடாது. ஆயுத ரீதியாக எமது போராட்டத்தை ஏற்றுக் கொண்டு சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்வேளையில் நாங்கள் எந்தவிதமான பிரிவினைக்கும் இடமளிக்கக்கூடாது.

தேசத்தின் விடுதலைக்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதற்காக நாங்கள் போராடவும் துணிந்து விட்டோம். இதற்கு பேரினவாதிகளாகிய நீங்கள் எத்தகைய சூழ்ச்சிகளைச் செய்தாலும் நாங்கள் ஒன்றுபட்டு நிற்கின்றோம் என்பதனை தெளிவாகக் காட்ட வேண்டும். அதுதான் நாம் சர்வதேசத்திற்கு சொல்லும் செய்தியாக இருக்கும் என்றார்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ரவிராஜ், மேதின ஏற்பாட்டுக் குழுத் தலைவர் எஸ்சிவராசா, ஏற்பாட்டுக் குழுப் பொருளாளர் பி.கனகசபாபதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் வேட்பாளர் ஜி.தங்கவேல், தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய குழு உறுப்பினர் சே.குலநாயகம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (எ-5-86)

## மூதூர் அகதிகளுக்கு நிவாரண விநியோகம்

கொழும்பு,ஏப்.21

மூதூர்ப் பகுதியில் இடம்பெற்ற வன்முறை காரணமாக அகதிகளாகியுள்ள மக்களுக்கு உடனடியாக நிவாரண உதவிகளை வழங்குமாறு பிரதமர் ரணில் உத்தரவிட்டுள்ளார்.

இதற்கமைய, இருபது கிராம சேவையாளர் பிரிவுகளில் 54 லட்சம் ரூபா பெறுமதியான உலர் உணவு வகைகள் இன்று விநியோகிக்கப்படும்.


புனர்வாழ்வு மற்றும் அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன விடுத்துள்ள பத்திரிகைச் செய்தியில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஆனமடுவ தபாலதிபர் குத்திக் கொலை!

புத்தளம்,ஏப்.21

ஆனமடுவ தபால் நிலையத்தில் பணியாற்றும் மேலதிக தபால் நிலைய அதிபர் அமில அபேரத்தின (வயது 33) கடந்த வெள்ளியன்று இரவு வேளையில் கூரிய ஆயுதமொன்றினால் தலையில் குத்தப்பட்டதன் காரணமான மரணமானார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான அவரது சடலம் ஆனமடுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சந்தேகத்தின் பேரில் ஒருவரை ஆனமடுவப் பொலீஸார் கைது செய்துள்ளனர். (ஐ)



ஈஸ்ரர் பண்டிகையையொட்டி வத்திக்கானின் சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற ஆராதனையில் கலந்துகொண்ட பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர்.

# காஸா நகர அகதிமுகாம் மீது இஸ்ரேல் ராணுவ நடவடிக்கை!

## 5பலஸ்தீனர் உயிரிழப்பு; வீடுகள் தகர்ப்பு

ஜெருசலேம்,ஏப்.21

இஸ்ரேலியப் படையினர் காஸாப் பிரதேசத்தில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்தனர். இதன்போது இஸ்ரேலிய இராணுவ வீரர் ஒருவரும் 5 பலஸ்தீனர்களும் உயிரிழந்தனர். தவிர சுமார் 40 பலஸ்தீனர்கள் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

தற்போதைய பலஸ்தீன எழுச்சி இடம்பெறும் கடந்த 30 மாத காலத்தில் காஸாவில் இஸ்ரேலிய இராணுவம் மேற்கொள்ளும் பாரிய நடவடிக்கை இதுவெனக் கருதப்படுகிறது.

காஸாவில் உள்ள ராவா அகதி முகாமை இலக்குவைத்தே இந்தப் படை நடவடிக்கை இடம்பெற்றது. அந்த அகதி முகாமில் தாம் தேடி வரும் பலஸ்தீனத் தீவிரவாதிகள் சிலர் மறைந்திருப்பதாகவும் -

அவர்களைப் பிடிப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் படுவதாகவும் -

இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

நேற்றுமுன்தினம் பின்னிரவில் டாங்கிகள் சகிதம் காஸாவிற்குள் இஸ்ரேலிய இராணுவம் புகுந்தது. அப்போது இதற்குத் துணையாக இஸ்ரேலிய ஹெலிகளும் தாக்குதலில் ஈடுபட்டன.

சுமார் 50 டாங்கிகள் மற்றும் கவசவாகனங்களுடன் இரவு நேரத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி இஸ்ரேலியப் படையினர் காஸா நகருக்குள் புகுந்ததாகவும் -

நகரை மும்முனைகளில் இருந்து நெருங்கிய இஸ்ரேலியப் படையினர் அகதிமுகாமை நோக்கி வேகமாக முன்னேறியதாகவும் -

நகரின் மத்தியில் உள்ள சந்தைப் பகுதியை இஸ்ரேலியப் படையினர் அடைந்தபோது பலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலிய இராணுவத்துக்கும் துப்பாக்கிச் சண்டை மூண்டதாகவும் -

மர்வான் கடிப்(வயது 39) என்ற பலஸ்தீனர் செய்தி நிறுவனம் ஒன்றிடம் தெரிவித்தார்.

நகரில் பல இடங்களிலும் மோதல்கள் இடம்பெற்றதால் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு விரைவாக எடுத்துச்செல்ல முடியாதிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ராவா அகதிமுகாமில் சுமார் 60 ஆயிரம் பேர் தங்கியுள்ளனர். இந்த இராணுவ நடவடிக்கையின்போது அகதிமுகாமில் உள்ள பல வீடுகள் தகர்க்கப்பட்டுள்ளன.

இதவேளை, காஸா நகரிலிருந்து பலஸ்தீனர்கள் ஏவிய 'குவாசாம்' ரொக்கெட்டுக்கள் மூன்று இஸ்ரேலிய நகரான ஸ்டெரொட்டில் 'வீழ்ந்து வெடித்ததாகவும் - இதில் இஸ்ரேலியப் பெண்மணி ஒருவர் காயமடைந்ததாகவும் - நகர முதல்வர் தெரிவித்தார்.

பலஸ்தீனப் பிரதமராக அறிவிக்கப்பட்டுள்ள மஹ்மூட் அப்பாஸுக்கும் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்துக்கும் இடையே பலஸ்தீன அமைச்சரவையை அமைப்பது தொடர்பாக விவாதம் இடம்பெற்றுவரும் வேளையில் இஸ்ரேலிய இராணுவம் இந்தப் பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)



இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கையில் காயமடைந்த பலஸ்தீனர்கள் சிலர் மருத்துவமனையில்....

# இந்தியாவிலும் சார்ஸ் தாக்கம்; 2 குழந்தைகள் ஆஸ்பத்திரியில்

புதுடில்லி,ஏப்.21

உயிர்கொல்லி நோயான சார்ஸ் நோய் முதன்முதலாக சீனாவில் தொடங்கியது. உலகம் முழுவதும் இப்போது 20இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இது பரவிவிட்டது. இந்த நோய்க்கு இதுவரை 160பேர் பலியாகிவிட்டனர். 3000இற்கும் மேற்பட்டவர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஹொங்கொங்கில் மேலும் 12பேர் இந்த நோய்க்கு பலியாகி இருக்கிறார்கள்.

இந்த நிலையில், இந்தியாவிலும் சார்ஸ் நோய் புகுந்துவிட்டது. சிங்கப்பூரில் இருந்து கோவா வந்த வார்தே என்பவருக்கு சார்ஸ் நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர் கோவா ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். பிறகு டில்லிராம் மனோகர் லோகியா ஆஸ்பத்திரியில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அங்கு அவர் குணமடைந்தார். இந்தியாவின் சார்ஸ் நோய் பாதித்த முதல் நோயாளி இவர்தான்.

இதையடுத்து, நியூஸிலாந்து நாட்டுக்காரர் ஒருவர் இந்தியா வந்தபோது அவருக்கு சார்ஸ் நோய் இருப்பதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. இதைத் தொடர்ந்து அவரும் டில்லி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த நிலையில் இந்தியாவில் மேலும் 3 பேருக்கு சார்ஸ் நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவர்களில் 2 பேர் குழந்தைகள்.

அரியான மாநிலம் குர்கோவூன் பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் சமீபத்தில் சீனாவிலிருந்து டில்லிக்கு திரும்பினார்கள். அந்த குடும்பத்தில் 7 வயதுச் சிறுமிக்கு சார்ஸ் நோய்க்கான அறிகுறி இருப்பது சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அந்தச் சிறுமி டில்லி அகில இந்திய மருத்துவ விஞ்ஞானக் கழக அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார். இதேபோல் கோவா ஆஸ்பத்திரியிலும் ஒரு சிறுவன் சார்ஸ் நோய்க்கான அறிகுறிகளுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான். இதேபோல் இன்னொருவருக்கும் சார்ஸ் நோய்க்கான அறிகுறி தென்பட்டுள்ளது. (ஒ)

# அமெரிக்க இராணுவ அணியினர் பக்தாத்திலிருந்து அகல்கின்றனர்!

பக்தாத்,ஏப்.21

ஈராக் மீது அமெரிக்கா 3 வாரங்களுக்கும் மேலாக நடத்திய போரில சதாம் ஹுசைன் ஆட்சி வீழ்த்தப்பட்டது. பக்தாத், பஸ்ரா, கர்பலா உட்பட முக்கிய நகரங்கள் அனைத்தும் அமெரிக்கப் படையின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன.

இப்போது அங்கு மறுசீரமைப்புக்கான பணிகளும், புதிய இடைக்கால அரசு அமைப்பதற்கான ஏற்பாடுகளும தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இருளில் மூழ்கிக்கிடந்த பக்தாத் நகரில் மின்சார விநியோகம் மீண்டும் தொடங்கிவிட்டது.

பக்தாத் நகரில் புகுந்த அமெரிக்க தரைப்படையினரும், அதிரடிப்படையினரும் சிறிதுசிறிதாக வெளியேறத் தொடங்கிவிட்டனர்.

நேற்று மட்டும் தரைப்படையின் 2பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரத்து 600 வீரர்கள் பக்தாத்தை விட்டு வெளியேறினார்கள். டாங்கிகள் மற்றும் கவச வாகனங்களுடன் அவர்கள் கர்பலா அருகே உள்ள முகாமுக்குத திரும்பினார்கள்.

இன்றும் ஒரு பிரிவினர் பக்தாத்திலிருந்து வெளியேறுகிறார்கள்.

பக்தாத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 15ஆயிரம் தரைப்படையினரை அமெரிக்கா நிறுத்தி இருந்தது.

போர் ஓய்ந்ததைத் தொடர்ந்து பஸ்ரா நகரில் பாடசாலைகள் திறக்கப்படுகின்றன.

நீண்ட நாள்களுக்குப் பிறகு பாடசாலை திரும்பிய மாணவர்கள் குண்டு வீச்சில் தங்கள் பாடசாலை இடிந்து சேதம் அடைந்துள்ளதைப் பார்த்து வேதனைப்பட்டனர். இடிபாடுகளை மாணவர்களும், ஆசிரியர்களும் சேர்ந்து அகற்றினார்கள்.

பஸ்ராவில் பெரும்பாலான பாடசாலைகளில் சதாமின் படம் வைக்கப்பட்டிருந்தது. அந்தப் படங்களை ஆசிரியர்களும் மாணவர்களும் தற்போது அகற்றுகின்றனர்.

இதேபோல் மூடிக்கிடந்த மசூதிகளும் பல நகரங்களில் திறக்கப்பட்டன. வழிபாட்டுத் தலங்களுக்கு மக்கள் பயமின்றி செல்லத் தொடங்கிவிட்டனர். (ஒ)

# சீனாவின் தேசிய விடுமுறை 'சார்ஸ்' அபாயத்தால் இரத்து!

சீனாவின் பிரதான விடுமுறை காலமான மேதின விடுமுறையை சீன அரசு இவ்வருடம் இரத்துச் செய்துள்ளது. 'சார்ஸ்' நோய் அபாயம் காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

கம்யூனிஸ நாடான சீனாவில் வருடந்தோறும் மேதினம் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுவது வழக்கம். இதனையொட்டி 'தங்க வாரம்' என்று வர்ணிக்கப்படும் ஒரு வாரகால விடுமுறையும் விடப்படும். இதன்போது பிற நாடுகளில் வாழும் இலட்சக்கணக்கான சீனர்கள் தமது தாய்நாட்டுக்குத் திரும்பி மேதினக் களியாட்டங்களில் கலந்துகொள்வார்கள். ஆனால், சீனா உட்பட பல நாடுகளையும் அச்சுறுத்திவரும் 'சார்ஸ்' நோய் காரணமாக சீன அரசு இவ்வருடம் மேதின விடுமுறை ரத்துச் செய்யப்படுவதாக அறிவித்துள்ளது.

இந்த விடுமுறையையொட்டி ஏராளமானோர் சீனாவுக்கு வந்து சென்றால் 'சார்ஸ்' நோய் பரவும் வாய்ப்பு அதிகரிக்கும் என்று சீன அரசு அஞ்சுவதாலேயே விடுமுறை ரத்துச்செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

சீன மாணவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்பவும், பிற இடங்களில் பணியாற்றும் சீனர்கள் தமது கிராமங்களுக்குச் செல்லவும் நடுத்தரச் சீனக் குடும்பங்கள் சுற்றுலா செல்லவும் மே மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் ஒருவார மேதின விடுமுறையைப் பயன்படுத்துவது வழக்கம். ஆனால், இவ்வருடம் இவையனைத்தும் தடைப்பட்டதால் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் கணிசமான பாதிப்பு ஏற்படும் என்று கருதப்படுகிறது.

ஆயினும், 79பேரை பலிகொண்டு, ஆயிரத்து 807 பேரைப் பாதித்துள்ள 'சார்ஸ்' நோயின் தாக்கத்துடன் ஒப்பிடுகையில் பொருளாதாரப் பாதிப்பு ஒரு பொருட்டல்ல என்று சீன சுகாதார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இதற்கிடையில் 'சார்ஸ்' நோயால் சீனாவில் இறந்தவர்கள் மற்றும் பாதிப்படைந்தவர்களின் எண்ணிக்கை மிக அதிகமென்றும் - ஆனால், சீன அரசு உண்மையான எண்ணிக்கையை மறைப்பதாகவும் -

உலகளவில் விமர்சனங்கள் எழுந்துள்ளன. (ஒ)

உலக அரங்கில்





இந்தியாவில் முதன்முதலாகத் தயாரிக்கப்பட்ட போர்க்கப்பலான 'ஷிவாலிக்' நேற்றுமுன்தினம் மும்பை துறைமுகத்தில் வெள்ளோட்டத்துக்காக கடலில் இறக்கப்படுகிறது.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சாவகச்சேரி பழைய பொலீஸ் நிலைய வீதியில் டாக்டர் சண்முகராஜின் ஆஸ்பத்திரியாக இயங்கிய காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: S.பாஸ்கரன், 31, யான்ஸ் பாடசாலை வீதி, உடுவில். (16964)

## காணவில்லை

கன்று ஈனும் நிலையிலுள்ள கறுப்புக்கலந்த மண்நிறமுடைய பசுமாட்டைக் காணவில்லை. (S×A, ↑, குறி) இது பற்றிய தகவல் தெரிந்தவர்கள் K.சின்னம்மா (சுசன்) 302/2, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம் என னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். (17025)

## திருமண சேவை

1972 ஆம் ஆண்டு, பூசம், செவ்வாய்க்குற்றமற்ற, லண்டனில் சொந்தமாகத் தொழில் பார்க்கும் Citizon உடன வந்துள்ள ஆணிற்கு அழகான 5அடி உயரமுடைய பெண் தேவை. படத்துடன் தொடர்புகொள்ளவும். தூர்க்கா திருமணசேவை 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (17028)

1975 ஆம் ஆண்டு, திருவோணம், செவ்வாய்க்குற்றமற்ற Computer Engineer ஆக லண்டனில் தொழில் பார்க்கும் ஆணிற்கு படித்த அழகான பெண் தேவை. தூர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (17029)

## வீடு வாடகைக்கு

மானிப்பாயை அண்மித்த பகுதியில் இரு அறைகள், இரு ஹோல்கள், சமையலறை, சுற்றுமதிலுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (சைவ போசனமுடைய சிறிய குடும்பத்திற்கு மட்டும்) தொடர்பு: காலை 6.30 முதல் 9.00 வரை, இரவு 8.30 முதல் 10.30 வரை. T.P.: 0777 209124 (16977)

## மணவறை விற்பனைக்கு

புது மணி வேலைகளுடனும் கண்ணாடிக் குத்துக்கால்களுடனும் கூடிய மணவறை உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பொன்னுத்துரை சற்குருநாதன் இல.8/1, பெருமாள கோவிலடி, யாழ்ப்பாணம். (17010)

## மணமகள் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பிரான்ஸில் P.R. உள்ள 30 வயது, 2இல் செவ்வாய், 19 பாவம் உள்ளவருக்கு படித்த, நற்குணமுள்ள, மெல்லிய அழகான பெண் தேவை. புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். U.K., பிரான்ஸிலும் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. மூன்று மாதத்திற்குள் பிரான்ஸிற்கு கூப்பிடலாம். தொடர்பு - விளம்பர இல.1851 மே/பா, உதயன். (16932)

இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல் சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

சித்தாரா
பனங்கற்கண்டு
இருமல்பாணி

Manufactured By
SITHARA PRODUCTS
Puttalam Road,
chilaw.
(Reg.No: 6382) AR/PR/No:- 228

யாழ் மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப்பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021 222 2567

(குறிப்பு:- சத்திரச் சந்திக்கு அண்மையில்) (சி-27488)

IBM Branded கணனிகள்

PERSONAL COMPUTER
Intel Pentium 4 1.8GHz/2.4GHz

NOTEBOOK / LAPTOP
Intel Pentium 4 2.4GHz
Intel Celeron 1. 1GHz

3 வருட உதிரிப்பாக உத்தரவாதம் (3 Years Parts Warranty)
100 % பரீட்சிக்கப்பட்ட கணனிகள்/உதிரிப்பாகங்கள்
கணனிகள் திருத்திக் கொடுக்கப்படும்.

MICRO PC SYSTEMS

வெள்ளவத்தை 15, 36th Lane, Col- 6. Tel : 074-5?764, 074-513235
கொட்டாஞ்சேனை 82, New Chetty St, Col-13. Tel : 074-619673, 074-613617
யாழ்ப்பாணம் 175/3, Kasthuriyar Road . Tel : 0777-308417

## கண்ணீர் அஞ்சலி

உரும்பிராய் ஞானவைரவ சுவாமி கோவில் தர்மகர்த்தா சபையின் முன்னாள் பொருளாளரும் தற்போதைய செயலாளரும் பல பொது நிறுவனங்களின் உறுப்பினருமான

### செல்லையா இராசேந்திரம்

(நல்லபிள்ளை)

அவர்கள் 19.04.2003 ஆம் திகதி சனிக்கிழமை இயற்கையெய்தியதை இட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

*கோப்பாய் வீதி,*
*உரும்பிராய்.* (17030)

தர்மகர்த்தாசபை, தொண்டர்சபை,
ஞானவைரவர் சுவாமி கோயில்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை மாணிக்கம் *(நயினாதீவு)*

நயினாதீவு, 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மாணிக்கம் நேற்று (20.04.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தியாகர் - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் சுந்தரி அம்மா, காலஞ்சென்ற காந்திமதி மற்றும் மீனாம்பிகை, பாலசுந்தரம் (முன்னாள் மேற்பார்வையாளர், லைடன் இண்டஸ்றீஸ் லிமிட்டெட்), கமலாம்பிகை (ஓய்வு பெற்ற மருத்துவ மாது), இராமலிங்கம் (முன்னாள் உரிமையாளர், சியாமளாஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, நாராணபிள்ளை, கந்தசாமி மற்றும் நகுலேஸ்வரி, சியாமளாதேவி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சின்னத்தம்பி, பொன்னம்பலம் ஆகியோரின் ஆருயிர்ச் சகோதரியும் காலஞ்சென்ற பொன்னாச்சி அவர்களின் உடன்பிறவா சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2003) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 4.00 மணிக்கு சல்லிபரவை இந்துமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

*7ஆம் வட்டாரம்,*
*நயினாதீவு.* (17031)

தகவல்:
க.இராமலிங்கம்
(மகன் - இந்தியா)

## பிரதமர் மீது ஜே.வி.பியினர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஏப்.21

மூதூரில் ஏற்பட்டுள்ள கலவரநிலையைச் சீராக்க உயர்மட்டக்குழு ஒன்றை அங்கு அனுப்பியதன் மூலம் தனது கையாலாகாத நிலையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிரூபித்துள்ளார் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவா ரவூப் ஹக்கீம் மூதூரில் நிலை கொண்டு, பிரதமரை அங்கு வருமாறு அழைப்பது கேலிக்கூத்தான விடயம் என வர்ணித்துள்ள ஜே.வி.பி., ஹக்கீமின் சொல்லுக்கு மதிப்புக் கொடுத்து உயர்மட்டக்குழு ஒன்றைப் பிரதமர் அங்கு அனுப்பியது அவரது கையாலாகாத நிலையை காட்டுகின்றது என்று கூறியுள்ளது.

அரசும் கண்காணிப்புக்குழுவும் சேர்ந்து விடுதலைப் புலிகளுக்கு தமிழீழத்தைக் கொடுக்கப்போகின்றன என்றும், மூதூர் சம்பவங்களுக்கு மூல காரணகர்த்தாக்கள் புலிகள்தான் என்றும் ஜே.வி.பி. கருத்துவெளியிட்டுள்ளது. (ம-3)

## தாச்சிப்போட்டி

யாழ்மாவட்டத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4.45மணிக்கு அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் சுன்னாகம் கலைவாணி விளையாட்டுக்கழகமும் நவாலி தென்றல் விளையாட்டுக்கழகமும் விளையாடவுள்ளன. (ஒ-86)

## காரைநகர் ப.நோ.சங்கத்துக்கு புதிய கட்டடம்

காரைநகர்,ஏப்.21

காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய மாடிக் கட்டடம் அமைப்பதற்காக கூட்டுறவுத் துறை அமைச்சினால் 50 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கடந்த திங்கட்கிழமை நட்டுவைத்தார். (எ-73)

## வலி.மேற்கில் பயிற்சி வகுப்புகள்

வலி.மேற்கு,ஏப்.21

புனர்வாழ்வு அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் மனிதவள அபிவிருத்திப்பிரிவின் அனுசரணையுடன் வலிகாமம் மேற்கு பிரதேச செயலகத்தில் மரவேலைப் பயிற்சி மற்றும் கணனிப் பயிற்சி நடைபெறவுள்ளன.

இவ்விரண்டு பயிற்சிநெறிகளிலும் பங்குபற்ற விரும்புகின்ற இளைஞர், யுவதிகள் தத்தமது கிராம அலுவலர்களிடம் மேலதிக விவரங்களைப் பெற்று, கிராம அலுவலர்களின் சிபாரிசுடன் பிரதேச செயலகத்தில் விண்ணப்பங்களை ஒப்படைக்குமாறு உதவிப் பிரதேச செயலர் கே.தர்மராசா அறிவித்துள்ளார். (ஒ-175)

## கூட்டமைப்பு - புலிகள் வன்னியில் சந்திப்பு

கிளிநொச்சி,ஏப்.21

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியைத் தவிர ஏனைய ஏழு கூட்டணி உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி தேர்தல், சமாதான முயற்சிகளின் முன்னேற்றம், அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை ஆகியன தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்பட்டன. (ம-3)

M.G.Services Station

இன்று முதல்
சித்தன்கேணியில்
ஆரம்பமாகின்றது.

கையிருப்பு இருக்கும் வரை
வாடிக்கையாளர்களுக்கு
இலவச பொலிசிங்குளோத்
வழங்கப்படும்.

T.P.:070-212413 (17027)

## கண்ணீர் அஞ்சலி



காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த

### திருமதி விஜயரத்தினம் சிவயோகம்

அவர்கள் 19.04.2003 இறைவனடி எய்தியமையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*நீலிப்பந்தனை,*
*காரைநகர்.* (17033)

உற்றார், உறவினர், நண்பர்கள்,
நீலிப்பந்தனைவாழ் மக்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி விஜயரத்தினம் சிவயோகம்

*(ஓய்வு பெற்ற அதிபர், காரைநகர்)*

காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த திருமதி விஜயரத்தினம் சிவயோகம் அவர்கள் 19.04.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நல்லதம்பி விஜயரத்தினம் (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் திருமதி யோ.வீரமங்கை ஸ்ராலினா (ஆங்கில விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்), பிறேம்தாஸ் குமாரசிறி (ஆங்கில ஆசிரியர், யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்), றஞ்சித்குமாரசிறி (பிரான்ஸ்), திருமதி கோ.வீரமனோகரிஸ்ரலினா (ஆசிரியை, சென்னை), காலஞ்சென்ற விஜயராஜசேகரன் குமாரசிறி, அருள்முகன் சாயிபாபா (ஜேர்மனி), ஜோன் மனோகரன் கென்னடி (ஆங்கில விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஆ.மார்க்கண்டு (ஓய்வு பெற்ற பிரதம புகையிரத அதிபர்), ஆ.கணபதிப்பிள்ளை மற்றும் திருமதி பொ.உமாதேவி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் யோகரத்தினம் (பொறியியலாளர்), யோகேஸ்வரி, சாந்தி, கோபிச்சந்திரன் (ஆசிரியர்), கலிஸ்ரா, நதிரா (விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரஜனிகா, நோபல்ரத்ணசிறி, யஸ்மினி, விஜயதர்சினி, விஜயடயானா, சஜந்திகா, கரோலினா, ஸ்ராலினா, ரொனி சந்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். திருமதி மா.கமலாவதி, திருமதி க.புவனேஸ்வரி, காலஞ்சென்ற வே.பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற கிராம அலுவலர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*நீலிப்பந்தனை,*
*காரைநகர்* (17032)

தகவல்:
க.ந.விஜயரத்தினம்
(கணவர்)

### திருமதி மாகிறெட் லூயிஸ்

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் தற்போது ஹொலண்டை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி மாகிறெட் லூயிஸ் வியாழக்கிழமை 17.04.2003 ஹொலண்டில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சவரிமுத்து லூயிஸ் (முன்னாள் கலால் உத்தியோகத்தர், சேனாதிபதி) அவர்களின் அன்பு மனைவியும் ஹொலண்டில் வசிப்பவர்களான ஞானராசா, இலங்கைராஜா அன்புமலர், ஆனந்தராசா, றீற்றா இலங்கைமலர், யாழ்மலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் எலிசபெத் (எலிவ்), தேவி, கமலாகரன் (றோச்), கொன்சி, சவுந்தரநாயகம், ராஜன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மாகிறெட், யாழ், மார்லோன் ஜலின், கட்சன், சுகிவுன், றிச்மன், லக்ஷ்மன், ருத்மன், நிஷாந்தினி, மகிழினி, தீலீபன், மகிழன், கபிலன், சர்மிலின் ஆகியோரின் பேர்த்தியும் கொலின் குட்டியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஹொலண்டில் நாளை (22.04.2003) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30இற்கு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இவரின் ஆன்மசாந்தித் திருப்பலி செவ்வாய்க்கிழமை 22.04.2003 மாலை 5.00 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

HOLLAND
Dommel 28
1703 JR Heerhugowaard
The Netherlands
0031 (0) 72 5746829 (16984)

தகவல்:
இலங்கைராஜா குடும்பம்
மகன்
சி.பி.ம.ஆரோக்கியநாதர் குடும்பம்
(ஞானமகன்)
32/5, அச்சக வீதி, யாழ்ப்பாணம்.

### திருமதி லோகேஸ்வரி சாந்தகுமார்

காரைநகர், ஆயிலியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரி சாந்தகுமார் அவர்கள் 19.04.2003 சனிக்கிழமை அன்று லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் தம்பிராசா சாந்தகுமாரின் அன்பு மனைவியும் கணேசபிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மகளும் தம்பிராசா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் சுதாகர் (லண்டன்), செந்தூரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேவி, சண் (இத்தாலி), யோகன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கிருஷ்ணகுமார் (இத்தாலி), சிவகுமார் (இத்தாலி), புனித லோகேஸ்வரி, பத்மா (ஜேர்மனி), காலஞ்சென்ற சண்முகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் உருக்குமணிதேவி (இத்தாலி), நாகேஸ்வரி(இத்தாலி), நவரத்தினம், பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி) ஆகியோரின் சகலியும் லோகேந்திரன், இராஜேஸ்வரி (இத்தாலி) ஆகியோரின் மச்சாளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.04.2003 வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*பெரியமதவடி,*
*களபூமி,*
*காரைநகர்.* (17024)

தகவல்
திருமதி த.தங்கம்மா
(மாமி)

உதயன்

# நெருக்கடிக்கு உள்ளாகும் சமாதான முயற்சிகள்

நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சமாதான முயற்சிகள் மிகவும் இக்கட்டான நிலையை அடைந்திருக்கின்றன.

★ மூதூர் மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நல்லுறவில் ஏற்பட்டுள்ள விரிசல்; ஆங்காங்கே இடம்பெறும் மோதல்கள் மற்றும் தீ வைப்புச் சம்பவங்களினால் ஏற்பட்டுள்ள இழப்புகள், அழிவுகள், பாதிப்புகள்.

★ கடற்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடலில் இடம்பெறக்கூடிய மோதல்களைத் தவிர்ப்பதற்காக இரு தரப்புக்கும் இடையில் இணக்கமான ஏற்பாடுகளை உருவாக்கும் முயற்சியில் கண்காணிப்புக் குழு ஈடுபட்டுவருகின்றது. ஆனால், கடற்படைத் தலைமையின் இறுக்கமான போக்குக் காரணமாக இணக்கநிலை ஏற்படுவதில் பிணக்கு உருவாகியிருப்பதாகத் தெரிகின்றது. தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து நாடு முழுவதிலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது என்ற யோசனையை - சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் ஒருதரப்பான புலிகளின் இணக்கம் இன்றி ஒருதலைப்பட்சமாகச் செயற்படுத்த அரசு முயன்று வருவதாகவும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

★ புனரமைப்பு, புனர்வாழ்வுத் தேவைகளுக்கான சர்வதேச நிதியுதவியைப் பெறுவதற்குரிய முயற்சிகளில் கூட்டாகவும் இணைந்தும் மேற்கொள்வது என அரசும் புலிகள் இயக்கமும் முடிவு செய்திருந்தன. ஆனால், உதவும் நாடுகளின் கூட்டத்துக்கு முன்னான முக்கிய கலந்துரையாடலை அமெரிக்காவில் நடத்தியதன் மூலம், அந்தக் கலந்துரையாடலில் புலிகள் பங்குபற்றாமல் இருப்பதை உறுதிசெய்து, இதுவிடயத்தில் புலிகளை ஒதுக்கும் நடவடிக்கையில் அரசுத் தரப்பு வெற்றி கண்டுள்ளது. இதனால் புலிகள் கடும் சீற்றமும் விசனமும் அடைந்துள்ளனர்.

★ அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டு பதினான்கு மாதங்கள் கடந்துவிட்டன. ஆறுசுற்று நேரடிப் பேச்சுக்கள் பூர்த்தியாகிவிட்டன. ஆனால், புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும், ஆறுசுற்றுப் பேச்சிலும் இணக்கம் காணப்பட்ட - தீர்மானிக்கப்பட்ட - பல விடயங்கள், அவற்றிற்குரிய காலங் கடந்தும் செயலுருப் பெறவில்லை; நடைமுறைப்படுத்தப்படவில்லை. இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியமர்வு விவகாரம் அதில் முக்கியமானது.

★ குடாநாட்டில் 30 சதவீத நிலப்பரப்பு உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அப்பிரதேச மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் தவிக்கின்றனர். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஓய்வு பெற்ற இந்திய இராணுவ அதிகாரி லெப்.ஜெனரல் நம்பியாரின் அறிக்கைக்குக் காத்திருப்பதாக கூறப்பட்டது. அதுவும் அடுத்த நான்கு ஐந்து நாள்களில் கிடைக்கும் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால், அதன் உள்ளடக்கம் இடம்பெயர்ந்த தமிழர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு சாதகமாக அமையாது என்ற தகவல் இப்போதே கசியத் தொடங்கிவிட்டது. அந்த அறிக்கை அப்படி அமைந்தால் பெரும் அரசியல் பூகம்பம் வெடிப்பதும், தமிழர் தரப்பிலிருந்து கடும் சீற்றம் வெளிப்படுவதும் தவிர்க்கமுடியாதவையாக இருக்கும்.

- இப்படி தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு பலதரப்பட்ட பாதிப்புகளும் நெருக்கடிகளும் தரக்கூடிய கருமங்கள், அம்சங்கள் ஒன்றுதிரண்டு, நெருங்கி வருகின்றன.

இவை அனைத்தும் சேர்ந்து சமாதான முன் முயற்சிகளுக்கு பெரும் ஆபத்தை - கேட்டை - விளைவித்துவிடுமோ என்ற அச்சம் பொதுமக்கள் மனதில் மேலோங்கி நிற்கின்றது.

சமாதான நடவடிக்கைகளை இவ்வாறு பல தரப்பிலும் இழுபறிக்கு உள்ளாக்க அனுமதிப்பது, கடைசியாக மக்களுக்கு சமாதானமும் அமைதியும் கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையையே தோற்றுவிக்கும்.

சமாதான முயற்சிகளுடன் சம்பந்தப்பட்ட தலைவர்கள் அர்ப்பணிப்போடும் உறுதியோடும் நேர்மையுடனும் திறந்த வழியிலும் செயற்படவேண்டிய முக்கிய காலகட்டம் இது. வெற்று அரசியல் கோஷங்களுக்கு மயங்கி, குறுகிய அரசியல் லாபங்களைக் கருதி, அவர்கள் குறுக்குவழியில் செயற்படுவார்களேயானால் சமாதானமும் அமைதியும் கானல் நீராகிவிடும் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சர்வதேசம் வியக்கும் வகையில்

# எமது ஒற்றுமையை எடுத்துக்காட்ட மே தினத்தில் அணி திரள்வோம்!

## ந.ரவிராஜ் எம்.பி. அறைகூவல்

வலி.வடக்கு,ஏப்.21

தமிழ் மக்களின் விடிவிற்கும் நலவாழ்விற்குமான ஒரு நிகழ்ச்சி தற்போது நடந்துகொண்டு இருக்கிறது. இதற்கு நாம் ஒவ்வொருவரும் பக்கத்துணையாகவிருந்து செயற்படவேண்டும். இந்த வகையில் நடைபெறவுள்ள மேதினக் கூட்டத்தில் அனைவரும் ஒன்றிணைந்து சர்வதேச சமூகம் வியக்கக்கூடிய வகையில் நடத்தவேண்டும்.

மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் குறிப்பிட்டார்.

மேதினக் கூட்டம் சம்பந்தமான கலநதுரையாடல் தமிழர் விடுதலைக கூட்டணியின் தந்தை செல்வா அகததில் நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய நரவிராஜ் மேலும் தெரிவிததததாவது:-

தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ மக்களின் விடுதலைக்காக அஹிம்சை வழியில் போராட்டம் நடத்துகின்ற வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தை தமிழ் மக்களுக்காக நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

இன்று இவ்விரு அமைப்புகளுமே மக்களின் விடுதலையை முதன்மைப்படுத்தி ஒருமித்து செயற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதனை எதிரிக்கும், முழு உலகிற்கும் நாம் எடுத்துக்காட்டவேண்டும்.

தொகுதிரீதியாக எமது கட்சியின் கிளைகள் முழுமையாகப் பலப்படுத்தப்படவில்லை. இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஆனால், வெகுவிரைவில் தொகுதி ரீதியாகக் கட்சிக் கிளைகள் அமைக்கப்பட்டுவிடும் - என்றார் ந.ரவிராஜ். (ஒ-5-86)

# வலி. மேற்குப் பகுதியில் நேரடியாக தேவை மதிப்பீட்டு நடவடிக்கைகள்

வலி.மேற்கு,ஏப்.21

வலிகாமம் மேற்குப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள சகல கிராமங்களுக்கும் செயலக திட்டமிடல் பகுதியினர் நேரடியாகச் சென்று கிராமத்தின் உடனடித் தேவைகளையும் நீண்டகாலத் தேவைகளையும் உதவிப் பிரதேச செயலர் கே.தர்மராசா தலைமையில் மதிப்பீடு செய்து வருகின்றனர்.

வட்டு.மேற்கில் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கிராம முன்னேற்றச்சங்கப் பணிமனையிலும் -

வட்டு. தென்மேற்கில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வட்டுமத்தி காந்தி சனசமூக நிலையத்திலும் -

சங்கரத்தையில் எதிர்வரும் வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு துணவி சனசமூக நிலையத்திலும் -

பனிப்புலத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு காலையடி மறுமலர்ச்சிக்கழகத்திலும் -

மூளாயில் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை10 மணிக்கு மூளாய் பிள்ளையார் ஆலயத்திலும் -

தேவை மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தினங்களில் குறிப்பிட்ட பிரிவுகளின் கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், மீளக்குடியமர்ந்த மக்களின் பிரதிநிதிகள், கிராமிய புனர்வாழ்வு நல்லிணக்க குழு உறுப்பினர்கள் ஆகியோர் தவறாது சமுகமளித்து தங்களுடைய கிராமத்தின் தேவைகளை இனம்கண்டு முன்னுரிமைப்படுத்துவதற்கு உதவிபுரியுமாறு உதவிப் பிரதேச செயலர் கே.தர்மராசா வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-175)

# இறைவரி ஷரத்தை ஆட்சேபித்து மனு!

உள்நாட்டு இறைவரி விசேட பிரமாணங்கள் சட்டத்தின் 8ஆவது ஷரத்தை ஆட்சேபித்து உயர்நீதிமன்றில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிஹால் அமரசேகர என்பவரே இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார். இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட பத்துப்பேர் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உள்நாட்டு இறைவரி தொடர்பான விடயங்களில் நிதி அமைச்சருக்குக் கட்டளை பிறப்பிக்கும் அதிகாரம் இந்த ஷரத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது என்றும் -

இது அரசியல் அமைப்புச்சட்ட விதிகளை மீறுவதாக அமைகிறது என்றும் மனுதாரர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்தச் ஷரத்தை அமுல்செய்யாது தடுத்து நிறுத்துவதற்கான உத்தரவை வழங்குமாறு மனுதாரர் நீதிமன்றைக் கோரியுள்ளார். (ஒ-10)

ஊர்காவற்றுறை பகுதியில் சம்பவம்:

# பெற்றோல் கானுக்குள் வாங்கிய ம.எண்ணெயால் ஏற்பட்ட விபரீதம்

## குப்பி விளக்கு தீப்பற்றி இருவர் காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.21

பெற்றோல் கானுக்குள் வாங்கிவந்த மண்எண்ணெயை எரிந்து கொண்டிருந்த குப்பிவிளக்குக்கு விட்டபோது அது குபீரென தீப்பற்றி எரிந்ததில் இருவர் காயமடைந்தனர்.

ஊர்காவற்றுறைப் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் எண்ணெய் விட்டவரான தேவதாஸன் லூட் பற்றீசியா (வயது 27) என்பவரும் -

அருகில் இருந்தவரான அன்ரனி சாள்ஸ் சுஜீபன் லதீப் (வயது 12) என்ற சிறுவனுமே காயமடைந்துள்ளனர்.

ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் இருவரும் அனுமதிக்கப்பட்டு, சுஜீபன் லதீப் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை - குப்பி விளக்கில் விளையாடிய மூன்று வயதுச் சிறுவனான பிரபாகரன் இசைப்பிரியன் என்பவர் அது தட்டுண்டு தீப்பற்றி எரிந்து படுகாயமடைந்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்த சிறுவன் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (எ-15)

**நாளை**

சித்திரை 09
செவ்வாய்க்கிழமை
22.04.2003
திதி : ஷஷ்டி
பிற்பகல் 1.15வரை
நட்சத்திரம் : பூராடம்
பின்னிரவு 12.56 வரை
சுபநேரம் : 4.31-6.01
ராகுகாலம் : 3.01-4.31
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

அச்சம் எப்பொழுதும் அறியாமையிலிருந்தே எழுகிறது.

# கலைப் பொக்கிஷங்களைப் பாதுகாப்பது இன்று அவசியம்!

## கலாசாரப் பேரவைத் தலைவர் வலியுறுத்து

வலி.மேற்கு,ஏப்.21

எமது கலைப் பொக்கிஷங்களைப் பாதுகாத்து ஆவணப்படுத்த வேண்டியது இன்றைய காலகட்டத்தில் அவசியமாகும். இவ்வாறு வலிகாமம் மேற்குக் கலாசாரப் பேரவைத் தலைவர் மு.சிவராசா தெரிவித்தார்.

கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டம் அண்மையில் சங்கானை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தலைமை வகித்து உரையாற்றிய மு.சிவராசா மேலும் கூறியதாவது:-

எமது பாரம்பரிய கலைநுணுக்கம் கொண்ட சிற்பங்கள் பொருள்கள் இன்று களவாடப்பட்டு பணத்துக்காக விற்பனை செய்யப்படுகின்றன. இதனை நாம் அனைவரும் ஒன்றிணைந்து தடுக்க வேண்டும். எமது மூதாதையர்கள் அரும்பெரும் கலைப் பொருள்களை எமக்குத் தந்துவிட்டுச் சென்றுள்ளனர். இதனை நாம் பணத்துக்காக விற்பதற்கு முயற்சிக்கக் கூடாது. பல இடங்களிலுள்ள கலை நுணுக்கமான கதவுகள், ஜன்னல்கள் இன்று தென்னிலங்கைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் நாம் இதனைக் கண்டும் காணாமல் இருந்துவிட்டோம். இன்று இதன் தாக்கம் எமக்குத் தெரிகின்றது. கலாசாரச் சீரழிவுகள் இன்று நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றன.

எமது பிரதேசத்திலுள்ள கலைஞர்களிடமிருந்து பாரம்பரிய கலைகளை வெளிக்கொணர வேண்டியதும் அவசியம் ஆகும் என்றார் அவர். (ஒ-175)

# பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக அபிவிருத்தித் தகவல் திரட்டும் பணி

## அரச அதிபர் பணிப்பின் பேரில்

வலி.மேற்கு,ஏப்.21

யாழ்.மாவட்டம் முழுவதும் பிரதேச செயலகப் பிரிவுகள் ரீதியாக பிரதேச அபிவிருத்தித் தகவல் திரட்டு ஒன்றைத் தயாரிக்குமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சகல பிரதேச செயலர்களையும் பணித்துள்ளார்.

பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் உடனடித்தேவைகளையும் நீண்டகாலத் தேவைகளையும் மதிப்பீடு செய்து பிரதேச அபிவிருத்தித் தகவல் திரட்டைத் தயாரிக்குமாறு அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

கிராமங்களின் தேவைகளைத் திரட்டும் போது மீளக்குடியமர்ந்த மக்களின் அடிப்படை வசதிகளை அதிகரித்தல், வீதிகளைப் புனரமைத்தல், பாலர் பாடசாலைகள் மற்றும் கழக மட்ட அமைப்புக்களின் கூட்டங்களை நடத்துவதற்குப் பல்நோக்கு மண்டபங்களை அமைத்தல், கிராமங்களிலுள்ள மூலப் பொருள்களைக் கொண்டு கிராமிய தொழிற்பயிற்சி நிலையங்களை ஆரம்பித்தல் போன்றவையும் தகவல் திரட்டில் இடம்பெறவுள்ளன. (ஒ-175)

# ஜே.வி.பி. - சு.கட்சி கூட்டு அடுத்த மாத இறுதியில் ஒப்பந்தம்

கொழும்பு,ஏப்.21

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் ஒன்றாக இணைந்து செயற்படுவது தொடர்பான உடன்பாடு அடுத்த மாத இறுதிப் பகுதியில் கைச்சாத்தாக இருக்கின்றது என்று சுதந்திரக் கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்த உடன்பாட்டில் தமது கட்சி சார்பில் தானும் ஜே.வி.பி. சார்பில் ரில்வின் சில்வாவும் கையொப்பம் இடவிருப்பதா கவும் அவர் கூறினார்.

உடன்பாடு கைச்சாத்தாகியதும் இரு கட்சிகளும் இணைந்து அரசுக்கு எதிரான போராட்டத்தை நாடு முழுவதும் முன்னெடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார். (ம-3)

# செஞ்சோலை சிறுவர் இல்லத்துக்கு புதிய கட்டடம் அமைக்க அடிக்கல்

## திருவையாற்றில் நடப்பட்டது

கிளிநொச்சி,ஏப்.21

செஞ்சோலைச் சிறுவர் இல்லத்துக்காக அமைக்கப்பட இருக்கும் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் வைபவம் நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணிக்கு திருவையாற்றில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு வல்லிபுனத்தில் இயங்கிவந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்துக்கான நிரந்தரக் கட்டடம் திருவையாற்றில் அமைக்கப்படவிருக்கிறது. இக்கட்டடத்துக்கான அடிக்கல்லை மாவீரர் அருணின் தந்தை வே.க.ஏரம்பு நட்டுவைத்தார்.

கல்விக்கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் உட்படப் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-5)

## யா/இணுவில் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்
## வருடாந்த பொதுக்கூட்டம்-2003

காலம் : 03.05.2003, சனிக்கிழமை பி.ப.3.30மணி

இடம் : யா/இணுவில் மத்திய கல்லூரி பிரதான மண்டபம்

தலைவர்: திரு.து.எங்கரசு

சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

*குறிப்பு:*
1. புதிய அங்கத்தவர்கள் சந்தாப்பணத்தினை செலுத்தி உறுப்புரிமையை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
2. பொதுக்கூட்டத்தினத்தன்று பி.ப.2.00மணிக்கு பழைய மாணவர் எதிர் கல்லூரி மாணவர்களுக்கிடையே கரபந்தாட்டப்போட்டி நடைபெறும்.

(17026)



## ஒப்பந்தகாரர் தேவை

நிறுவப்பட இருக்கும் புதிய தொழிற்சாலை ஒன்றின் கட்டட நிறுவுகைக்கு கட்டடம், மரவேலை, வர்ணம் செய்வதற்கு ஒப்பந்தகாரர் தேவை. முன் அனுபவம், சொந்த விவரங்கள் பதிவுசெய்த தொழில் ஸ்தாபனமாயின் சகல விவரங்களுடனும் 03-05-2003இற்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.

விளம்பர இல.1847,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

(16723)


## அச்சுவேலிக் கடையில் செவ்வாயன்று திருட்டு

அச்சுவேலி பஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றின் கடையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பொருள்களை திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாயன்று இடம்பெற்றுள்ளது.

பால்மா, சிகரெட், பீடி, பற்றறிகள் உள்ளிட்ட 4 லட்சத்து 30ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களே இவ்வாறு திருட்டுப்போயுள்ளன என அச்சுவேலிப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ் இராணுவ ஜெனரல் மட்டு.விஜயம்

இலங்கையில் தங்கியுள்ள பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி லெப்.ஜெனரல் மைக்கல் றோஸ் மட்டக்களப்புக்கு நேற்றுமுன்தினம் விஜயம் மேற்கொண்டார்.

மட்டக்களப்பு படைத்தளத்தில் படை உயர் அதிகாரிகள் மற்றும் கண்காணிப்புக்குழு அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து அவர் கலந்துரையாடினார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக நடைமுறையில் காணப்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து அவர் கேட்டறிந்தார். (ம-3)


## வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்
## (நீகோட்)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
### கடன் இலக்கம் - 1846 - ஸ்ரீ (எஸ்.எவ்.)

*முல்லைத்தீவு மாவட்டத்தில் சமூக மீளமைப்பு உப திட்டத்தை அமுல்படுத்துவதற்கு பங்குதாரராவதற்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் (என். ஜி. ஓ) விருப்ப வெளிப்பாடு பற்றிய அழைப்பு*

வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வடகிழக்கின் இன முரண்பாட்டினால் மக்களின், குறிப்பாக உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளான நிவாரணம், புனரமைப்பு வேலைகளுக்கு மேலும் வலுவூட்டி பங்களிப்புச் செய்வதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்கத் திணைக்களங்களின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், திட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்படுத்தப்படும். இந்த சமூக அபிவிருத்தி உப திட்டங்கள் சமூகத்தை மையமாக கொண்ட சமூகத்தவர்களின் பூரண பங்களிப்போடு செயற்படுத்தப்படும். இத் திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தை திட்டமிடுவதிலும், அமுல் நடத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளைக் கண்காணிப்பதிலும் முற்றாக பங்களிப்புச்செய்வதை உறுதிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்காக சில கிராமங்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பொறுத்து மேலும் பல கிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

ஆரம்ப கட்டமாக பின்வரும் கிராமங்களில் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்குத் தயார்ப்படுத்துவதற்கும், வளங்களை ஒன்றுபடுத்துவதற்கும், நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்கு - கிழக்கில் திட்டங்களைச் செயற்படுத்தும் தகுதிவாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| மாவட்டம் | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | கிராமம் |
| --- | --- | --- |
| முல்லைத்தீவு | மாந்தை கிழக்கு | பூவரசன்குளம் |

ஆர்வமுடைய அரச சார்பற்ற நிறுவனம் இது பற்றிய மேலதிக விவரங்களை வேலை நாள்களில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 வரை மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபரிடமிருந்து (முல்லைத்தீவு மாவட்டம், தொலைபேசி 024-23402, தொலை நகரி 024-20592) பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல் நடத்த விரும்பும் தகுதிவாய்ந்த அரச சார்பற்ற நிறுவனம் தங்களுடைய விருப்பத் தெரிவை மாவட்ட செயலாளருக்கு / அரசாங்க அதிபருக்கு 02.05.2003 மாலை 3.00 மணிக்கு முன்பதாகத் தெரிவிக்க வேண்டும்.

விருப்பத் தெரிவை அறிவிக்கும் பொழுது பின்வரும் விவரங்களை அது உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விவரங்கள், நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், சட்டரீதியான பதிவு செய்த விவரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு, கிளைக் காரியாலயம் முதலியன.
02. தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையையும் நிபுணத்துவம் பெற்ற துறையையும்.
03. வடகிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு சமூக மீளமைப்பு வேலைகளில் உள்ள அனுபவம்.
04. விசேடமாக வடகிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறு குழுக்களை உருவாக்குதல், சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் உள்ள அனுபவம்.
05. வடகிழக்கில் தற்போது தாங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வேலை தொகையையும், கடந்த 05 வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத் திட்டங்களின் விவரங்களையும்.
06. இக்குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.
07. விருப்பத் தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும் விண்ணப்பமும் அந்தரங்கமாக பேணிக்காக்கப்படும் என்பதையும் அவைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

திருமதி இமெல்டா சுகுமார்,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

(C/27484)



## BIT
**Bachelor of Information Technology**
**University of Colombo School of Computing**



கொழும்பு பல்கலைக்கழகத்தின் மேற்படி தகவல் தொழில்நுட்பமான பட்டக்கல்விக்கான, கல்வியாண்டு 2003/2004 இற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்ப முடிவு திகதி - 25.04.2003**

IIS தலைமையகத்தில் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
விண்ணப்ப முடிவு திகதி மேலும் நீடிக்கப்படமாட்டாது!

BIT பட்டப்படிப்புக்கு வடக்கு, கிழக்கிலேயே சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத்தருவது IIS நிறுவனம் மட்டுமே.

"உங்கள் எதிர்காலத்தை மாற்றியமைக்கக்கூடிய இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்"

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
No. 100, Clock Tower Road, Jaffna.
Tel : 21 222 2831 (C/27460)



## திருமண வாழ்த்து

11.04.2003 வெள்ளிக்கிழமையன்று
இல்லற வாழ்வில் இணைந்துகொண்ட
எமது நண்பர்கள்

திரு. ஸ.சிவாகரன் M.தயாநிதி

அவர்கள் எல்லாச் செல்வமும் பெற்று,
சிறப்பாக நீடூழிவாழ
துர்க்கை அம்மனைப் பிரார்த்திக்கும்...

இணுவில் மேற்கு. (17013) - நண்பர்கள்.



## சதீஷ் அவர்களை மனதார பாராட்டுகிறோம்



சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் (வலி. தென்மேற்கு) சமுர்த்தி அபிவிருத்தி அலுவலராக (S.D.O.) கடமையாற்றும் திரு. செல்வராஜா சதீஷ் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட முகாமைத்துவப் பரீட்சையில் **Diploma in Management (OUSL)** எனும் பட்டத்தைப் பெற்றதையிட்டு மனதார பாராட்டுகின்றோம்.

செல்வராஜா சதீஷ்
Dip. in Mgt (OUSL)

கல்லூரி நண்பர்கள்,
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.

(17021)



## மாணவி சோபிகாவை மனதார வாழ்த்துகின்றோம்

மகளிர் விவகார அமைச்சினால் சர்வதேச மகளிர் தினம் தொடர்பாக அகில இலங்கை ரீதியில் கட்டுரைப்போட்டியில் உயர்தரப்பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற நீர்வேலியைச் சேர்ந்த மாணவி செல்வி சோபிகா தவராஜா (*J/Kopay C.College*) கொழும்பு - BMICH இல் சான்றிதழ்களும் பரிசில்களும் பெற்றதையிட்டு மனதார வாழ்த்துகின்றோம்.

திருமதி செல்வராணி குடும்பம்,
*புலவர் வீதி, நவாலி வடக்கு.* (17019) திரு.திருமதி செ.ரமேஷ்



## நினைவஞ்சலி

தோற்றம்
27 - 05 - 1936



மறைவு
01 - 05 - 1994

## திருமதி நாகராசா இராஜேஸ்வரி
(பபா)

எங்கள் அன்புத் தெய்வமே நாங்கள்
உம்மைப் பிரிவோமென்று கனவு கூடக்
கண்டதில்லை எம்மை அன்போடும் பாசத்தோடும்
கனவுகளோடும் வளர்த்த உங்கள் நினைவுகள்
பத்தாண்டுகள் அல்ல என்றுமே எம் மனவுலகில்
நிலைத்திருக்கும்!

*7ஆம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.* (17013)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# யாழ். பழைய கச்சேரியை அழிய விட்டிருக்கின்றோமா?



பேராசிரியர் லக்ஷ்மன் அல்விஸ், ரோகான் சி.அலுவிகார, தயாப்பிரிய, பி.நவரட்ண ஆகியோர் சேர்ந்து 'இலங்கையில் பிரித்தானியர் காலக் கட்டடக் கலை' (British period architecture in Sri Lanka) என்றவொரு நூலை எழுதியுள்ளனர். முழுவதும், கறுப்பு வெள்ளையில் கட்டடங்களின் புகைப் படங்கள் மற்றும் தேவையான இடங்களில் அளவிடைப்படங்கள், அவை கட்டப்பட்ட ஆண்டுகள், பாணிகள் (Styles) முதலிய பல தகவல்களுடன் எழுதப்பட்டுள்ள அவர்களது மேற்படி நூலுக்குள் இலங்கையின் வடக்கு




- கிழக்குப் பிரதேசங்கள் உள்ளாக் கப்படவில்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இலங்கையின் வடக்கு - கிழக்குப் பிரதேசங்களை தமிழர்களிடம வழங்குதலே நீதியானது என்று கருதி, இலங்கைக்குள் இருந்து அவர்கள் வடக்கு - கிழக்கைத் துண்டித்துவிட வில்லை. பதிலாக, வழமையான சிங்கள மைய இனவாத நோக்கு நிலையில் நின்று வடக்கையும் கிழக்கையும் அவர்கள் புறக்கணித்துவிட்டிருக் கிறார்கள்.

இது இப்படியிருக்க, யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் என்ன செய்கிறார்கள்?

- 1840களில் கட்டப்பட்ட யாழ்ப்பாணம் பழைய கச்சேரியை துவிச் சக்கர, முச்சக்கரவண்டித் தரிப்பிடமாக மாற்றியுள்ளார்கள்.

உலகம் பூராகவும், தேசங்கள் தமது பண்பாட்டு வரலாற்றுச் சொத்துக்களை எல்லாவகையிலும் பாதுகாக்கப் போராடிவருகின்ற நிலையில், எங்களிடம் எஞ்சியுள்ள பண்பாட்டு, வரலாற்றுச் சொத்துக்களை வெற்றிகரமாக அழிப்பதில் நாம் திட சங்கற்பம் பூண்டுள்ளோம் எனப் பல தடவைகள் எண்ணத்தோன்றுகிறது. ஈழத்தமிழர் தமது வாழ்வை, தேசியத்தைக் கட்டியமைப்பதில் தீர்மானகரமான ஒரு பங்கையாற்றிய காலனிய காலத்திற்குரியதும், ஏறத்தாழ நூற்றியறுபது ஆண்டுகளுக்கு முற்பட்ட யாழ்ப்பாணத்தின் வரலாற்று அடையாளங்களில் ஒன்றான யாழ்ப்பாணம் பழைய கச்சேரியை இவ்விதமே அழியவிடப்போகின்றோமா?

தென்னிலங்கையில் ஒல்லாந்தர் காலக் கட்டடங்கள் உட்பட பல புராதன கட்டடங்கள் ஹொட்டலகளாகவும், அலுவலகங்களாகவும் மாற்றப்பட்டும், பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. தென்னிலங்கையில் மட்டுமல்ல, உலகம் பூராவிலும் இதுதான் நிலைமை. புராதன பேறுகள் என்ற வகையில் பழைய கட்டடங்கள் பேணிப் பாதுகாக்கப்படுவதுடன், அவற்றில் மாற்றங்களை உண்டுபண்ணுவதைக்கூட அவை சட்டரீதியாகத் தடுத்துள்ளன. இவ்வகைச் சட்டங்கள் இலங்கையில்கூட உள்ளன. தவிர்க்கமுடியாத பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படும்போதுகூட அவற்றிற்குரிய விஞ்ஞான பூர்வமான முறையில், அதற்கான விசேட பயிற்சி பெற்றவர்களால் அவை மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்விதமாகவெல்லாம் இருக்க விடுதலைக்காகப் போராடுகின்ற ஓரினத்தைச் சார்ந்த நாம், எந்தப் பிரக்ஞையுமற்று இவற்றைப் பார்த்துக் கொண்டு ஒரு 'பிளாஸ்டிக்' யாழ்ப்பாணத்தைக் கட்டியெழுப்புவதில் முனைப்பாக இருக்கின்றோம் என்பது எவ்வளவு முரண்பாடானது. இந்தப் பழைய கச்சேரியில்தான் ஆறுமுக நாவலர் அவர்கள் தனது அச்சுயந்திரச் சாலையை யாழ்ப்பணத்தில் தொடங்க அப்போதைய அரச அதிபரான டைக்கிடம் (Dyke) அனுமதி பெற்றார் எனப் புத்தகங்களில் படம் போடும் நாம், இவ்விதமான பல வரலாற்று நிகழ்ச்சிகளோடு சம்பந்தப்பட்ட இக்கட்டடத்தை - அதுவும் 'சமாதான காலத்தில்' அழிய விடுகிறோம் என்பது எவ்வளவு துக்ககரமானது.

**பாக்கியநாதன் அகிலன்**

நிலக்கண்ணிகளை அகற்றும் பிரிவுகள், அண்மையில் இக்கச்சேரி அமைந்துள்ள பழைய பூங்காப் பகுதியை கண்ணிவெடி அகற்றித் துப்புரவு செய்தலின் தொடர்ச்சியாக, இப்பழைய கச்சேரிப் பகுதியும் துப்புரவு செய்யப்பட்டிருக்கின்றது. இருந்தபோதும், இதன் அடுத்த கட்டமாக பழைய கச்சேரியை அதற்குரிய விஞ்ஞான பூர்வமான பாதுகாத்தல் செயல்முறையைப் பயன்படுத்தி மீள நிர்மாணிக்கவோ அல்லது பாதுகாக்கவோ கச்சேரி நிர்வாகம் முடிவெடுத்ததாகத் தெரியவில்லை. அப்படியான ஒரு திட்டம் தம்மிடம் இப்போதில்லை என்று கச்சேரியைச் சார்ந்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதுவொரு மோசமானநிலை. இக்கட்டடத்தை அதன் வரலாற்று, பண்பாட்டு முக்கியத்துவம் கருதி பேணுதற்கான நடவடிக்கையை யாழ்ப்பாண அரச அதிபர் எடுக்க வேண்டும். பதவி வழியாக அவரே இதற்குரிய தகுதிப்பாடு உடைய வரும்கூட. பிரித்தானிய அரசு கூட அதன் வரலாற்றோடு தனக்கிருக்கின்ற தொடர்பு கருதி, அதனை மீள் நிலை நிறுத்த அல்லது பாதுகாக்க உதவக்



கண்டியிலிருந்த கச்சேரி (1880) தற்போது நீதிமன்றமாகப் பயன்படுத்தப்படுகிறது.

கூடும். ஏனெனில், இவ்விதமான பணிகளுக்கு தென்னிலங்கையில் அவை உதவியுள்ளன. இவ்விதம் இது திருத்தப்படுகையில், கச்சேரியின் முக்கியமான ஓரலகை அங்கு வைத்திருக்கக்கூட முடியும். ஆனால், நாம் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் இயற்கையாகவும், செயற்கையாகவும் அது விரைவாக அழிந்துவிடும். எனவே, சம்பந்தப்பட்ட சகல தரப்புகளும் இதனைக் கவனத்தில் எடுக்கவேண்டும். எல்லாவற்றையும் போல இதனையும் காலம் கடக்கவிடாது விரைவான, ஆரோக்கியமான முடிவு மூலம் காப்பாற்ற முயற்சி எடுக்கப்படவேண்டும். யாழ்ப்பாணம் பழைய கச்சேரி மட்டுமல்ல, இதுபோல யாழ்ப்பாணத்தில் உள்ள பழைய கட்டடங்களை அவற்றோடு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் பாதுகாப்பதற்கான அனைத்துச் செயற்பாடுகளையும் செய்தல்வேண்டும். தேச நிர்மாணம் என்பது, தேசத்தின் எல்லாவிதமான வளங்களையும் கட்டியெழுப்பிப் பேணுதலில்தான் தங்கியுள்ளது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

---

# 'ஒற்றைச் சிறகோடு பறத்தல்' ஓர் ஆழ் மனதின் தேடல்...

**அசோகா ஹந்தகம என்பவர் ஒரு முன்னணி சிங்களத் திரைப்பட இயக்குநர்.**

**அண்மையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற 'சினியாத்ரா' படவிழாவில் அவரது தயாரிப்பில் உருவான 'நிலவுப்பெண்' திரையிடப்பட்டது. அவரது இயக்கத்தில் அண்மையில் வெளிவந்த 'ஒற்றைச் சிறகோடு பறத்தல்' (Flying with one wing) என்ற சிங்களத் திரைப்படம் பற்றிய ஒரு பார்வை இது. இதுபோன்ற அயல்மொழி திரைப்படங்கள் பற்றிய விமர்சனங்கள் வாசகர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.**

"அவன் மிகத் துடிப்பானவன். மிகக் கடினமான வேலையைக் கூட இலகுவில் முடித்துவிடக் கூடியவன். கராஜ் ஒன்றில் கடுமையாய் உழைக கிறான். அழகான இளம் மனைவி. இனிமையாக நகரும் வாழ்வு. நிலவொளியையும் வெளிச்சத்தையும் தேடுகின்ற மனைவி. அவனோ இருட்டையே அதிகம் விரும்புவான். அவனுக்குள் பல குழப்பங்கள்... வெறுப்புக்கள். இடையில் ஒரு விபத்து. அதற்கு அவன் மருத்துவரிடம் போக வேண்டிய நிர்ப்பந்தம். அந்த நிர்ப்பந்தத்தின் விளைவாய் பல திருப்பங்கள். அவனுக்குள் உள்ள இரகசியத்தைச் சுரண்டி தன் இச்சைகளைத் தீர்க்க முனையும் மருத்துவர். அவனைக் கேவலப்படுத்தியே தீர்வதென்ற நோக்கில் கராஜ் முதலாளி. கடும் உழைப்பாளியானாலும் தம்முடைய கும்மாளங்களில் கலந்துகொள்ளாமல் தனித்துப் போக விரும்பும் அவனைச் சீண்டிக் கேலி செய்து, தம்மைப் போலவே அவனையும் மாற்ற முயலும சக தொழிலாளர்கள். அவ்வேளையில் அவர்களுக்குக் கிடைக்கும் பெருத்த அடியால் அவன் பற்றிய இரகசியம். அவனைப் பற்றி மருத்துவர் மட்டுமே அறிந்திருந்த அந்த இரகசியம், கராஜ் முதலாளியை எட்டி சக தொழிலாளர்களூடே வெளிச்சத்துக்கு வரும் போது அவன் கொலைகாரனாகிறான். மருதது்வர் கொலை செய்யப்படுகிறார். அவன் வீட்டுக்குத் திரும்பி வருகிறான். இப்போது மனைவியும் அவனைக் கேள்வி கேட்க ஆரம்பிக்கிறாள். அந்த வீட்டைச் சனங்கள் சூழ்கின்றார்கள். வீட்டுக்குள் கற்கள் சரமாரியாக விழுகின்றன. அவன் வெளியே வருகின்றான். அவளாக... இனி எதுவுமில்லை. எதுவுமேயில்லை. இரகசியங்களை உடைத்தாயிற்று என்பதாய்.... கற்களை எறிகின்ற அந்த சமூகத்தின் மீது காறி உமிழ்வதாய்.. அவன், அவளாக... நிர்வாணமாக வந்து நிற்கிறான்(ள்).

எப்படியிருப்பினும், அவன்(ள்) கொலையாளி. பொலீஸ் ஜீப் அவனை(ளை)ச் சுமந்து கொண்டு போகிறது. அவன(ள)து இளம் மனைவி கடைசிச் சந்து வரைக்கும் அவன் பெயர்சொல்லி அழைத்து ஓடிக்கொண்டிருக்கிறாள். அவளைத் தடுப்பதற்கு யாருமில்லை. அவள் நெடுந்தூரம் தொடரவும் முடியாது. எனினும், அவள் அவனது பெயரை அழைத்துக் கொண்டு பின்னால் ஓடுகிறாள்".

அசோகா ஹந்தகம மிகச் சிறந்த சிங்களத் திரைப்பட இயக்குநர். ஏற்கனவே சிறந்த திரைச் சித்திரங்களை வழங்கியவர். (அவரது 'நிலவுப்பெண்', 'சினியாத்ரா'வில் காண்பிக்கப்பட்டது) அவரது இயக்கத்தில் அண்மையில் வெளியான "ஒற்றைச் சிறகோடு பறத்தல்" (Flying with the one wing) எனும் சிங்களத் திரைப் படத்தின் சுருக்க வடிவத்தையே மேலே கண்டிருக்கிறீர்கள்.

இத்திரை வடிவத்தினூடாக இயக்குநரது பெண்ணியம் சார்ந்த பார்வையையும், உளவியல் பார்வையையும் இனங்கண்டு கொள்ளமுடிகிறது. முக்கியமான மூன்று களங்களிலேயே (கதாநாயகன் வீடு, மருத்துவமனை, கராஜ்) பெரும்பாலும் கதை நகர்கிறது. இவற்றிலேயும் இரண்டு களங்களில் பெண்கள் மீதான அழுத்தம், அடக்குமுறை மிக அப்பட்டமாகத் தென்படுகிறது. கராஜ் முதலாளி தன்



ஹந்தகம

னிடம் பணிபுரியும் பெண்களிடம் தகாத முறையில் நடப்பதும், அதனால் வெறுப்புறும் பெண்கள் வேலையிலிருந்து விலகுவதும், புதிய பெண்கள் வேலையில் சேர்வதும் மீண்டும் அதே பிரச்சினை கிளம்புவதும், மருத்துவமனையில் கருச்சிதைவுக்கு வரும் பெண்கள் திரும்பத் திரும்ப சொல்லும் காரணங்களும் ஆண்வர்க்கம் மீது வெறுப்பேற்ற வைக்கின்றன. அந்த வெறுப்பினால் ஏற்பட்ட சவாலாகத்தான் 'அவள்' 'அவனா'க மாறவேண்டிய தேவை ஏற்பட்டதோ...?

**சினிமா**

ஆனாலும், திரும்பத் திரும்ப ஒரே வட்டமாக கராஜ் முதலாளி, பெண்கள்.... மருத்துவர், பெண்கள்.. எனக் காட்சிகள் நகர்கின்றபோது, இவ்வளவு அதிகத்தடவை ஒரு விஷயத்தையே சொல்லிக்கொண்டிருக்க வேண்டுமா எனத் தோன்றாமல் இல்லை. இவ்வாறான சந்தர்ப்பத்தில்தான் மீண்டும் ஒருமுறை கதைக் கருவையும், அந்த மருத்துவர் கருச்சிதைவு மருத்துவர் என்பதையும் மீண்டும் ஒருமுறை ஞாபகப்படுத்த வேண்டி நேர்கிறது.

கருச்சிதைவுக்கு வரும் பெண்கள் தத்தம் முறைப்பாடுகளைச் சொல்லி அழுகின்றபோது, மீண்டும், மீண்டும் அதே முறைப்பாடுகள், லேசாய் நகைப்புணர்வை பார்வையாளரிடையே தூண்டி, எடுத்துக்கொண்ட காத்திரத்தை வழங்காமல் போய்விடுமோ... எனப் படுகிறது. அவர்களின் முறையீடுகள் உண்மையாய் இருக்கலாம் சிலவேளை பொய்யாகவும் கூட இருக்கலாம். அவர்களில் சிலர் சந்தர்ப்பவசத்தால் ஏமாந்திருக்கலாம். மற்றும் சிலர் தாமாகவே அந்நிலைக்கு உட்பட்டிருக்கலாம். எப்படியிருப்பினும், மிகக் கனதியான பிரச்சினைக்குள் ஆட்பட்டுப்போன அவர்கள், கணநேரச் சிரிப்புக்குரியவர்களாய் ஆகிப்போதல் விரும்பத்தக்க ஒன்றல்ல.

மனித பலவீனங்களின் மொத்த வடிவங்களைத் திரைப்படம் பூராவும் தரிசிக்க முடிகிறது. அந்தப் பெண்கள், மருத்துவர், கராஜ் முதலாளி, ஏன் நாயகன், நாயகி கூட மனித பலவீனங்களின் கூட்டாகவே தரிசனந் தருகிறார்கள். உள நெருக்கீடுகளுக்கிடையிலும், சமூக நெருக்குதல்களுக்கிடையிலும் மனிதம் எப்படி நசுங்குண்டு போகிறது என்பதற்கு நமது நாயகனே நல்லதொரு சான்றாகிறான். ஆணாகவே தன்னை இனங்காட்டி ஆணாகவே வாழ்கின்ற போதிலுமகூட, அந்த அடி மனதில் தொக்கி நிற்கின்ற பெண்மையின் ஒரு துளியை அவன் ரகசியமாய் அணிந்து மகிழ்கின்ற அந்த ஒற்றைச் சங்கிலியூடு காணமுடிகிறது. கடைசியில் அந்த உணர்வையும் மூடி மறைத்து மனைவிக்கு அந்தச் சங்கிலியை அணிவிக்கின்ற போதில்.... அவனுக்காக மனம் பச்சாதாபப்படுவதைத் தவிர்க்க முடியவில்லை.

நிறையப் படிமங்களூடு அற்புதமாகக் கதை நகர்த்திச் செல்லப்படுகின்றது. ஒரு கொலையைக்கூட மிக அழகாக, கலை நேர்த்தியோடு, காய் கறி நறுக்குவதுடன் முடித்துவிட்ட, மிகத் திறமையான இயக்குநருக்கு, அவன் பெண்தான் என்பதைக் காட்டுவதற்கு வேறு வழியா இல்லை என்று ஒரு கேள்வி தவிர்க்கமுடியாமல் எழுவது உண்மைதான். ஆனால், படத்தின் கருவிற்கான கேள்விக்கு அப்பட்டமான விடை அளிக்கவேண்டும் என்பதே இயக்குநரின் நோக்கமெனில் அதற்கு மிஞ்சி நாம் கேள்வி கேட்க முடியாது.

அந்த இளம் மனைவி மனதைத் தொடும்படி மென்மையானவளாய் இருக்கிறாள். இதுவரைக்கும் அவன் பெண் என்பதில் யாருக்கும் எந்தச் சந்தேகமுமே வரவில்லை.அதை அறிந்த பின்னால் தான் வீட்டை நோக்கி கல்லெறி விழுகிறது. அதுவரைக்கும் பேசாமலிருந்த மனைவி இப்போது பேசுகிறாள்...

**தாட்சாயணி**

"எனக்கு முன்பே தெரியும் நீ பெண்தானென்று..." ஆனாலும் அவள் அவனை ஓர் அதிசயத்தோடு அங்கீகரித்திருக்கிறாள்.

தன்னால் முடியாததை இன்னொரு பெண்ணான 'அவன்' சாதித்திருக்கிறான் என்கிற பெருமிதம்.

அவன் தன்னை ஏமாற்றி விட்டான் என்கிற ஆத்திரம்.

எப்படியிருப்பினும், அவனைக் கணவனாயே ஏற்றுக்கொண்டுவிட்ட அளவற்ற அன்பு.... என எல்லாவற்றினதும் கூட்டுக் கலவையாய் இருக்கிறாள் அவள். அவன் சிறைப்படுவது தாங்காமல் கடைசி வரைக்கும் அவன் பின்னாலேயே ஓடுகிறாள்...

அவளை இந்த உலகம் இனி என்ன செய்யப்போகிறது...?

இந்த உலகத்தில் இனி அவளுக்

(09ஆம் பக்கம் பார்க்க)

# சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 3579212 இருந்து 3586206 வரை

சீட்டிழுப்பு இல. 1393

திகதி 19.04.2003



## வெற்றி எண்கள்

**01 03 25 34 51**

போனஸ் எண் **43**

ஜக்பொட் பரிசு

ரூபா **2,287,350/-** வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 2,287,350/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 32 | 10,000/- | 320,000/- |
| 3 | 2,054 | 500/- | 1,027,000/- |
| 2 | 34,528 | 20/- | 690,560/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 01ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 41,986 | 10/- | 419,860/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.2,657,420/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்

ரூபா **2,613,600/-**

தொடர் இல. 2586782க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 ஏப்ரல் 23ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

3579743-9-72
3579447-1-36
3583496-9-43
3582076-6-24
3585050-7-30

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விறியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 466 |
| திகதி | 18.04.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு

செல்லுபடியாகும் தொடர் இல. 5869079-5873041

வெற்றி இலக்கங்கள் **01 02 26 50**



லக்கினம்

சிங்கம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 1,675,650/-
வெல்லப்படவில்லை

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,866,700/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 85,689 | 10 | 856,890 |
| 2 இலக்கங்கள் | 7,830 | 20 | 156,600 |
| 1 இல + லக்கினம் | 7,753 | 30 | 232,590 |
| 2 இல + லக்கினம் | 730 | 100 | 73,000 |
| 3 இலக்கங்கள் | 216 | 500 | 108,000 |
| 3 இல + லக்கினம் | 19 | 5,000 | 95,000 |
| 4 இலக்கங்கள் | 01 | 100,000 | 100,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,675,650 | - |
| மொத்தம் | 102,238 | - | 1,622,080 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 1,622,080/-

தொடர் இல. 4878235க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 ஏப்ரல் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விறியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

5871280-6-97
5869926-4-44
5872599-8-08
5871775-4-69
5871475-0-69


# சுடர் ஒளி

27.04.2003 இதழில்

விலை 14/=




- இராணுவ அரசியல் மாற்றங்களுக்கு வித்திட்ட ஆனையிறவு பெரும் சமர்.
- அமைதிக்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் மூதூர் புத்தளம் சம்பவங்கள்.
- மட்டக்களப்பை கலக்கும் குழுக்கள் கொட்டமடக்கிய மகிழ்வில் மக்கள்.
- மதத்தை கேடயமாக்கி குற்றங்கள் மக்களின் மனங்களில் ஏக்கங்கள். - (தேடல்)
- நக்கீரன் ஆசிரியர் கோபால் மீது ஜெயலலிதா 'பொடா' பாய்ச்சல்
- தலை தப்பியது. - (நகைச்சுவை விருந்து)
- சதாம் ஹுசைன் எங்கே? மண்டையை பிசைகிறார் புஷ்

மற்றும் பித்தன் பதில்கள், சினிமா, இணையத்தளங்களிலிருந்து, மசாலா மிக்ஸ், விளையாட்டு, கலையமுதம் உட்பட பல்வேறு சுவையான அம்சங்கள்.

(C27496)

# வேலைவாய்ப்பை அதிகரிக்கும் தேசிய பொறியியல் விஞ்ஞானம்

இலங்கையில் தேசிய டிப்ளோமா பொறியியல் விஞ்ஞானக் கற்கைநெறியானது கட்டுநாயக்கா தொழில்நுட்பவியலாளர் பொறியியல் பயிற்சி நிறுவகத்தால் நடத்தப்படுகிறது. இது அரச தேசியக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நிர்வகிக்கப்படுகிறது.

இங்கு 3பிரதான பொறியியல் பிரிவுகளும் அதற்கான துணைப்பிரிவுகளும் உள்ளன. அவையாவன:

**குடிசார் பொறியியல் (Civil Engineering)**

கட்டடம் மற்றும் கட்டுமானத்துறை [Building & Structural Engineering (CB)]

நெடுஞ்சாலை மற்றும் ரயில்வே துறை [Highway & Railway Engineering (CH)]

நீர் மற்றும் சுற்றுச் சூழல் துறை [Water & Environmental Engineering (CW)]

**மின்னியல் பொறியியல் (Electrical Engineering)**

இலத்திரனியல் துறை [Electronics Engineering (EE)]

தொலைத் தொடர்பியல் துறை [Telecommunications Engineering (ET)]

மின்சக்தித் துறை [Electrical Power Engineering (EP)]

**இயந்திரவியல் பொறியியல் (Mechanical Engineering)**

கடல்சார் துறை [Marine Engineering (MM)]

இயந்திரவியல் பொதுத்துறை [Mechanical General Engineering (MG)]

தானியங்கித் துறை [Automotive Engineering (MA)]

இப்பாடத்திட்டம் 4 வருட காலத்தைக் கொண்டது. இப்பாடத்திட்டம் 73 வார விரிவுரைகளையும் 135 வார தொழிற் பயிற்சியையும் வழங்குகிறது. இத்தொழிற் பயிற்சி இலங்கையில் உள்ள முன்னணி அரச, தனியார் நிறுவனங்களால் வழங்கப்படும். கற்கைக் காலத்தில் பெரும் பகுதி தொழிற் பயிற்சியைக் கொண்டிருப்பது சிறப்பம்சமாகும். இக்கற்கை நெறியானது HNDE, NDT ஆகிய கற்கை நெறிகளுக்குச் சமமானது. இக்கற்கை நெறி சர்வதேச அங்கீகாரம் (ISO 9002) கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இக்கற்கைநெறி முற்றுமுழுதான வேலை வாய்ப்பினைக் கொண்டது.

தமிழ் மாணவர்கள் கணிதத் துறையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றிருப்பினும் இத்துறையில் பரீட்சயமின்மையால் இச்சந்தர்ப்பம் பெரும்பான்மையின மாணவர்களிடம் நழுவிச் செல்கிறது. இது ஒரு வேதனைக்குரிய விடயமாகும். NDES கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவுடன் இரு வருடங்களில் இதன் மூலம் B.Sc.(Eng.) பட்டத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

இக்கற்கைநெறியானது முற்றுமுழுதாக ஆங்கில மொழியில் கற்பிக்கப்படுகிறது. இதற்கான மாணவர்கள் ஜி.சீ.ஈ. உயர்தரப் பிரிவில் கணிதத்துறையில் பெற்ற பெறுபேற்றின் அடிப்படையிலும், ஆங்கில மொழி மூல பரீட்சையிலும் மற்றும் நேர்முகப் பரீட்சையிலும் தெரிவு செய்யப்படுவார்கள். தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு முதற்கட்டத்தில் ஆங்கிலத்தில் சிறப்புப் பயிற்சி வழங்கப்படும். அவர்களுக்கு உதவிக் கொடுப்பனவு மற்றும் இலவச விடுதி வசதி வழங்கப்படும். அத்துடன் தொழிற் பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறும் நிறுவனத்தினால் மேலதிகக் கொடுப்பனவுகளும் இதர வசதிகளும் வழங்கப்படும்.

இன்றைய இளைய தலைமுறையின் பெரும் சவாலாக அமையும் வேலையில்லாப் பிரச்சினையை இத்துறை நிவர்த்தி செய்கிறது என்று கூறுவது மிகையாகாது.

# தமிழரைக் காப்பதற்கு தன்னுயிரை படையினரிடம் பணயம் வைத்த தேரர்

**கடந்த செவ்வாயன்று கொழும்பில் காலமான நயினாதீவு நாக தீப விகாராதிபதி வண. பர்மதவத்த தர்மகீர்த்தி திஸ்ஸநாயக்க தேரரின் இறுதிக்கிரியை இன்று திங்கட்கிழமை நயினாதீவில் நடைபெறவுள்ளது. தேரரின் சமயசேவை, தமிழ் மக்களுடன் அவர் கொண்டிருந்த நல்லுறவு என்பன குறித்து ஆராய்கிறது இக்கட்டுரை.**

தென்னிலங்கை சிங்கள பௌத்த யாத்திரிகர்களை கடைப்பால் ஈர்ப்பது நயினாதீவாகிய நாகதீபம். நாகநாட்டு இளவரசர்களான மாமன், மருமகனுக்கிடையில் நீண்ட காலமாக நடைபெற்ற யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை நிலைநாட்டவே புத்தர் நயினாதீவாம் நாகதீபத்துக்கு எழுந்தருளினார் என்று கூறப்படுகின்றது.

நயினாதீவின் காணிப்பதிவு புத்தர் திடல், புத்தர் பள்ளம் என்பன பண்டைய வரலாற்றுத் தொன்மையை விளக்கி நிற்கின்றன. அந்நிய ஆட்சியாளர்களின் கெடுபிடியால் தகர்க்கப்பட்ட வரலாற்றுச் சான்றுகள் மீண்டும் உருவாகிய நிலையில் 1940 ஆம் ஆண்டின் பின் பெரியசாமி என்று அழைக்கப்பட்ட பெரிய ஆமத்துறு தேரர் அவர்களால் உருவாக்கப்பட்டதே நயினாதீவு பௌத்த விகாரை.

நயினை மக்களால் அன்று பெரியசாமி என்று அழைக்கப்பட்ட பெரிய பௌத்த குருவுடன் இணைந்து பணிபுரிந்தவர் - அன்று நயினை மக்களால் சின்னச்சாமி என்று அழைக்கப்பட்டவர்தான் கடந்த 15.04.2003 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமான நயினாதீவு விகாராதிபதி சங்கைக்குரிய பண்டித்த பிராமனவத்தே தர்ம கீர்த்திதிஸ்ஸ மகாநாயக்கதேரர்.

ஆரம்பகர்த்தாவான மூத்த பௌத்தகுரு 1974ஆம் ஆண்டு கொழும்பில் காலமாகி அவரின் வேண்டுகோளுக்கமைய நயினாதீவில்தான் அவரின் திருவுடல் தகனம் செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து இரண்டாவது விகாராதிபதியாக விளங்கியவர்தான் சங்கைக்குரிய பண்டித்த பிராமனவத்தே தர்மகீர்த்தி திஸ்ஸ மகாநாயக்கதேரர்.

பௌத்த குருமார் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க மறுத்துவருபவர்கள் என்ற கருத்து பரவலாக தமிழ் மக்களிடையே நிலவி வந்தாலும், புத்த பெருமானின் போதனைகளின் மறு உருவமாக மனித உருவில் நடமாடுகின்ற பௌத்த குருமார்களும் இலங்கையில் வாழ்ந்திருக்கின்றார்கள் - வாழ்ந்து நல்லுபதேசங்களை போதித்துக்கொண்டும் இருக்கிறார்கள்.

அமரத்துவம் அடைந்த நயினை விகாராதிபதி அவர்கள் நயினை மக்களோடு மக்களாக அரை நூற்றாண்டுக்கு மேலாக ஒன்றி வாழ்ந்தவர். இன, மத, மொழி வேறுபாடின்றி அனைவரையும் அரவணைத்து அன்பால் ஆக்கிரமித்த பௌத்த குரு நயினை மக்களின் இன்ப,துன்ப நிகழ்வுகளில் கலந்து மக்களின் இன்ப, துன்பங்களில் பங்கேற்றுக்கொண்டவர். ஏழைகளின் பங்காளனாக வாழ்ந்து காட்டிய ஓர் ஏழைப்பங்காளன் இவர். நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் ஒரு பக்தனாகவே வாழ்ந்த இவர், நயினை மக்கள் மீது அவர் வைத்திருந்த அன்பெனும் பாசப்பிணைப்புத்தான் அவரைக் கடந்தகால யுத்தச் சூழ்நிலையிலும் நயினையில் யாதொரு அச்சமும் இன்றி இறைபணியாற்ற வைத்தது.

**நயினை**
**நா.கோபாலகிருஷ்ணன்**
*தலைவர்,*
*சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாசம்*

கடந்த கால யுத்த நிகழ்வுகளில் 1986ஆம் ஆண்டு நயினாதீவுக் கரையை அண்டிய கடலில் கடற்படைப் படகு ஒன்று தாக்குதலுக்குள்ளானது. அதனால் சினங்கொண்ட கடற்படையினர் அம்பாளின் உடைமைகளைச் சேதப்படுத்தியும் கடற்கரையில் வெள்ளத்துல் வந்திறங்கிய இருவரைச் சுட்டுக்கொன்றும் வேட்டுகள் தீர்த்து ஆவேசத்துடன் நின்றனர்.

அன்று விகாரைப் பாதையில் யாரும் தடையின்றிச் செல்லலாம். யாதொரு தடையும் கிடையாது பாடசாலைகள் விட்டு மாணவ மாணவிகள் அவ்வழியால் வந்து கொண்டிருந்தனர். மக்கள் உயிரைக் காப்பாற்ற நயினாதீவின் தென்பகுதியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தனர். மரண ஓலம், மாணவச் செல்வங்களை விகாரையில் பாதுகாப்பாக இருக்கவைத்துவிட்டு விகாராதிபதி நயினை அம்பாள் ஆலய வீதியில் சுட்டபடி நின்ற படையினரை நோக்கி 'என்னைச் சுட்டுக் கொன்று விட்டு மக்களைச் சுடுங்கள்'' என்று ஆவேசமாக கத்திக்கொண்டு ஓடினார். விகாராதிபதியின் செயலை முற்றிலும் எதிர்பாராத படையினர் சினம் தணிந்து செய்வதறியாது நின்றனர்.

அன்று விகாராதிபதி அவர்கள் தன்னுயிரைக் கொடுக்க முன்வராவிட்டிருந்தால் பல உயிரிழப்பு அன்று நயினை மண்ணில் நிகழ்ந்திருக்கும். தென்னிலங்கையில் இருந்து கொண்டு சமாதானத்திற்கு எதிராக குரல் கொடுக்கின்ற பௌத்த குருமார் நாகதீபத்தின் விகாராதிபதி அவர்களின் மேற்படி செயலை தெரிந்துகொள்ளட்டும்.

புத்த பெருமானின் போதனையின் மறு உருவமாக மனித உருவில் நடமாடியவர்தான் சங்கைக்குரிய பண்டித்த பிராமனவத்த தர்மகீர்த்தி திஸ்ஸ தேரர். சமாதானத்தின் திருவுருவம் அவர்.

புத்தபெருமான் வைகாசி விசாகத்தில் பிறந்து ஞானம் பெற்றதும், சமாதி அடைந்ததும் ஒரே தினங்களில்தான். அதேபோன்று அமரர் அவர்களும் 1915ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி பிறந்து, 2003ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி அமைதி அடைந்துள்ளார்.

சிங்கள, தமிழ் மக்களின் உறவு வலுப்பெற்று சமாதானம் நிலைத்து ஓங்கிநிற்கவேண்டும் என்பதில் உறுதியாக நின்று பணியாற்றிய உத்தம பௌத்தகுருவின் பிரார்த்தனை வேண்டுகோள் நிலைபெறவேண்டும். சமாதானத்திற்காக நயினை மண்ணில் வாழ்ந்த பௌத்த குருவின் அடிச்சுவட்டை அனைத்து பௌத்தகுருமார்களும் பின்பற்றுவார்களானால் நாட்டில் பகைமை என்ற சொல்லிற்கே இடமில்லாமற்போய்விடும். ★

## ஒற்றை...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

கான தீர்வுதான் என்ன?

உலுப்பிக்கொண்டு கேள்வி கேட்கிறது மனது. அவளுக்கு மட்டுமல்ல அவளது கணவனான மற்றப் பெண்ணுக்கும் இனி எது மிஞ்சப் போகிறது இவ்வுலகில்... வசைகளும், கல்லெறிகளும் மட்டும்தானா...?

ஒரு பெண்ணாயிருந்தபோது அவளுக்குக் கிடைக்காத சுதந்திரத்தை, ஆணாயிருக்கையில் அவள் எப்படிப் பெற்றாள் என்பதும், ஆண் செய்யக்கூடிய எல்லாவற்றையும் அதைவிட அதிகமாயும் அவள் செய்யக்கூடியவள் என்பதும் மிகச் சத்தியமாய் அறிந்த போதிலும், அந்தச் சமூகம் அவளை அங்கீகரிக்காதது ஏன்? பெண் என்பவளை உள்ளுக்குள்ளேயே பொசுங்க வைத்துவிட வேண்டும் என்கிற அகங்காரமா? அல்லது அவள் ஆணையும் மிஞ்சிவிடுவாள் என்கின்ற ஆற்றாமையா...?

'ஒற்றைச் சிறகோடு பறத்தல்' தூண்டிவிட்ட கேள்விகளிலிருந்து இன்னும் மீளமுடியவில்லை.

அசோகா ஹந்தகமவினது திரைவண்ணத்திலும், ஆணாகவே மாறிவிட்ட திருமதி ஹந்தகமவினது நடிப்புவண்ணத்திலும் அவன்(ள்) இன்னமும் நெஞ்சிலிருக்கிறான்(ள்). ★

## கல்விச்சாலைக் காட்சிகள்



தீவகக் கல்வி வலயம் நடத்திய பண்ணிசைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் புங்குடுதீவு பெருங்காடு கிராஞ்சியம்பதி முருகன் ஆலயத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (எ-15)



பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம அதிதியாகக் கொண்ட இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் உரை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். கல்லூரி அதிபர் நா.சண்முகசுந்தரம், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட முன்னாள் அதிபர் வி.நாகராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-135)





கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், தென்மராட்சி கல்வி வலய முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பேரம்பலம் ஆகியோரை வித்தியாலய அதிபர் ரி.கந்தையா மற்றும் ஆசிரியர்கள் மைதானத்துக்கு அழைத்துச்செல்வதைப் படத்தில் காணலாம். (எ)



இடைக்காடு மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் வெற்றியீட்டிய மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் வித்தியாலய அதிபர் எஸ்.சித்திரவேல் காணப்படுகின்றார். (எ-173)

## பளைக் கோட்ட ஆரம்ப வகுப்பு ஆசிரியருக்கு!

தென்மராட்சி,ஏப்.21

பளைக் கல்விக் கோட்டப் பாட சாலைகளின் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான "பாடசாலையில் சுகாதாரமும் போசாக்கும்" பற்றிய ஆறு நாள்கள் செயலமர்வு இன்று காலை பளை வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையில் ஆரம்பமாகும்.(ஒ-117)

## கோழிக்குஞ்சு விற்பனை

தென்மராட்சி,ஏப்.21.

அச்சுவேலியில் உற்பத்தி செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகள் இன்று திங்கட்கிழமை சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-117)

## கட்டடப் பொருள்கள் விநியோகத்திற்கான அவசர கேள்விப் பத்திர அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்டத்தின் அவசர மீள்குடியேற்ற புனரமைப்பு புனர்நிர்மாணத்திட்டத்தின் கீழ் மீளக்குடியமர்ந்தவர்களுக்கு வேண்டிய உடனடி புனரமைப்பு வேலைகளிற்காக தேவைப்படும் பின்வரும் கட்டடப் பொருள்களை விநியோகிப்பதற்கான கேள்வி கோரப்படுகின்றது.

| தேவைப்படும் பொருள்கள் | அளவு |
|---|---|
| 1. சிமெந்து | - 14,000 பைக்கற்றுகள் |
| 2. மலசலகூட பேசின் | - 500 |

மேற்குறிப்பிட்ட பொருள்களை விநியோகிக்கக் கூடிய நிறுவனம் அல்லது தனிப்பட்ட நபர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் புனர்வாழ்வுப் பகுதியில் கேள்விப் படிவத்தினை பெற்று, பூரணப்படுத்தி 2003 ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் கேள்விப்பெட்டியில் போடுதல் வேண்டும். அன்று பகல் 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

மேலதிக விவரங்களை யாழ்.செயலக திட்டப்பணிப்பாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

செ.பத்மநாதன்
*தலைவர்/ அரசாங்க அதிபர்,*
*மாவட்ட கேள்விச் சபை/ மாவட்ட செயலகம்,*
*யாழ்ப்பாணம்.* (C/27500)

## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### அரசாங்க அதிபர், யாழ். மாவட்டம்.

**கோமாரி கப்பல் RRAN/CP/01 மூலம் பெறப்பட்ட அரிசியிலிருந்து சேகரிக்கப்பட்ட பழுதடைந்த அரிசி, தவிடு முதலியவற்றை விற்பதற்கான கேள்வி கோரல்**

யாழ். மாவட்ட, கோண்டாவில் அரச உணவு களஞ்சியத்தில் தற்போது கீழ்க்குறிப்பிட்ட பொருள்களை கொள்வனவு செய்ய ஆர்வமுடையவர்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது.

| பொருள்கள் | தற்போதுள்ள பொருள்களின் தொகை (கிகி) (தொகையின் அளவு அதிகரிக்கப்படும்) |
|---|---|
| பழுதடைந்த அரிசி | 75, 000 |
| தவிடு (புழுங்கல் - சிவப்பு நாட்டரிசி) | 50, 000 |

கேள்வியை சமர்ப்பிப்பதற்கு ஆர்வமுடையவர்கள் மீளளிக்கமுடியாத வைப்பாக ரூபா 500/- ஐ செலுத்தி யாழ். மாவட்ட செயலக புனர்வாழ்வுப் பகுதியில் கேள்வி ஆவணங்களையும் கேள்விப் பத்திரத்தையும் 21.04.2003 ஆம் திகதியிலிருந்து 08.05.2003 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்திய கேள்விப்பத்திரத்தை முகவரியிட்டு யாழ். மாவட்ட செயலக புனர்வாழ்வுப் பகுதியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ 09.05.2003 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பி.ப. 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். விலைகேள் முறிக்காக மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புச் செலுத்தப்படவேண்டும். (ஒரு மெற்றிக் தொன்னிற்கு ரூபா 200.00படி)

கேள்விகள் மேற்படி பொருளகளின் முழுத்தொகைக்கும் அல்லது ஒரு மெற்றிக்தொன்னிற்குக் குறையாத தொகைக்கும் கேள்விகளைச் சமர்ப்பிக்கலாம்.

செ.பத்மநாதன்
தலைவர்/அரசாங்க அதிபர்,
மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
(C/27449)

## இரண்டாம் ஆண்டு நினைவுகளில்...

மலர்வு 07 - 04 - 1964



உதிர்வு 13 - 05 - 2001

### திருமதி அருளம்மா நடராசா

திதி: 21.04.2003

கனவாகப் போனதே உங்கள் நினைவுகள் அந்நாளில் கானல் நீராக, ஆனதே எங்கள் வாழ்க்கை இந்நாளில் மறாதது. உங்கள் பாசம் எம் நெஞ்சில் ஒருநாளும் மறப்போமோ பிரார்த்திக்க ஆத்மசாந்திக்காய் எந்நாளும் ஓம் சாந்தி சாந்தி!! சாந்தி!!!

*"அம்பாள் அகம்"*
*சித்தம்பாதி, கரணவாய்.* (17037) என்றும் உங்கள் நினைவுகளுடன் கணவர், பிள்ளைகள்.

# தனித்து நின்ற 3வயதுச் சிறுமியிடம் முகமாலையில் சங்கிலி அபகரிப்பு!

## பெண்மணி பிடிபட்டார்

சிறுமியிடம் நகையைத் திருடிய பெண்மணி அச்சிறுமியின் பெற்றோரிடம் சிக்கிய சம்பவம் முகமாலையில் இடம்பெற்றது.

திருநெல்வேலியைச் சேர்ந்த தில்லையம்பலம் நல்லைநாதன் என்பவர் தனது மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் யாழ்ப்பாணம் வருவதற்காக முகமாலையை வந்தடைந்ததாகவும் -

அப்போது மனைவி கைக்கடிகாரத்தைக் காணவில்லையென்று சொன்னதால், அதனை அவர்கள் தேடியதாகவும் -

அவ்வேளையில் தனித்து விடப்பட்ட 3 வயது மகள் நிதுஷாவின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலி காணாமற்போனதாகவும் -

கூறப்படுகிறது.

விசாரித்தபோது சங்கிலியைக் கழற்றி எடுத்த பெண்மணி என்று ஒருவரை அச்சிறுமி அடையாளம் காட்டியதாகவும்-

அப்பெண்ணிடம் தீவிரமாக விசாரித்தபோது உண்மையை ஒப்புக் கொண்ட அப்பெண்மணி தான் அபகரித்து நிலத்தில் புதைத்து வைத்திருந்த சங்கிலியை எடுத்துக் கொடுத்ததாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

சங்கிலியை அபகரித்த பெண்மணியும் குழந்தைகளுடன் நின்றதால் எச்சரித்து விடுவிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. (ஒ-15)

## கோப்பாய் கோட்டத்தில் தளபாடப் பற்றாக்குறை

கோப்பாய் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் போதிய தளபாடங்கள் இல்லை என்றும்-

இதனால், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும்- தெரிவிக்கப்படுகிறது. (எ-180)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் பணிபுரியும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று நண்பகல் 12.00 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஆங்கில ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் பெறுவது தொடர்பான முக்கிய தகவல்கள் சேகரிக்க இருப்பதால் சம்பந்தப்பட்ட சகல பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் தவறாது இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு பகுதிநேர ஆசிரியர் சங்கத் தலைவர் கே.சிவராஜா கேட்டுள்ளார். (ஐ-5)

## கொட்டன் அடிக்கு இலக்காகி படுகாயம்

வீதியில் நடந்துவந்த இளைஞர் கொட்டன் அடிக்கு இலக்காகி படுகாயமடைந்த சம்பவம் கடந்த வெள்ளியன்று இரவு 8மணியளவில் சாவகச்சேரியில் கச்சாய் வீதியில் உள்ள சக்தியம்மன் வித்தியாலயத்திற்கு முன்னால் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த இரத்தினம் கோகுலன் (வயது 25) என்பவரே இவ்வாறு தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அம்புலன்ஸ் மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (எ-117)

**BEACON**
யாழ்நகர்
**A/L 2004**
(தமிழ்) வினாவிடை வகுப்புகள்
ஆசிரியர்
திரு.நாக.தமிழிந்திரன்
ஆரம்பம்: 22.04.2003
செவ்வாய் காலை 9.00மணி
(17036)

**BEACON**
இந்துநாகரிகம்
T.பரீஸ்
2004 வினா-விடை வகுப்புகள் நடைபெறுகின்றன.
குறிப்பு: கட்டமைப்பு வினா.
ஆரம்பம் 22.04.2003
செவ்வாய் 11.00-13.00மணி
வியாழன் 9.00-10.00மணி
(17035)

**கருத்தரங்கு**
அடிப்படைக் கணிதம்
த.தவசேகர்
ஆரம்பம் 22.04.2003காலை 9மணி
* வணிக, கலை முதற் தேர்வுகளான அடிப்படைக் கணிதம் செவ்வாய் - வெள்ளி வரை தொடர்ச்சியாக நடைபெறும்.
166, ஸ்ரான்லி வீதி,
ஆரியகுளம் சந்தி, யாழ்நகர்.
(17034)

## தந்தை செல்வா நினைவுநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஏப்.21

தந்தை செல்வாவின் 26ஆவது நினைவுநாள் நிகழ்ச்சி எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ்.பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் சு.மோகனதாஸ் தலைமையில், கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த மனோன்மணியம் சுந்தரனார், பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் கா.பா. அறவாணன் "காந்திய நெறிகளும் தந்தை செல்வாவின் இலட்சியமும் என்ற தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார். கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(ஒ-4-86)

# மரண அறிவித்தல்கள்

## கதிரவேலு பொன்னையா

இருபாலையைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பொன்னையா அவர்கள் 19.04.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் யோகரத்தினத்தின் (குருத்து) அன்புக் கணவரும் பத்மாவதி, பிறேமாவதி, வசந்தகுமாரி (ஜேர்மனி), ரவிகரன் (Colombo), விஜயகுமாரி (ஜேர்மனி), மனோகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கனகரத்தினம், லோகேஸ்வரன் (டயா வாச்வேக்ஸ்), கணேஸ் (ஜேர்மனி), சுப்பிரமணியம் (ஜேர்மனி), இந்திராணி, ஜெயா ஆகியோரின் அன்பு மாமனாரும் தா.க.பாலசுப்பிரமணியம் (பொபி ரவல்ஸ், பம்பலப்பிட்டி), ராஜேஸ்வரி (சீனி - ஜேர்மனி), பரமேஸ்வரி (வேவி - கனடா), காலஞ்சென்றவர்களான தா.க.சின்னத்துரை, அப்புத்துரை ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்புச் சகோதரனும் சரவணபவானந்தனின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2003) திங்கட்கிழமை 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாமகள் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.* (17043)
தகவல்: பொ.ரவிகரன் (மகன்)

## செல்லையா இராஜேந்திரம்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராஜேந்திரம் நேற்றுமுன்தினம் (19.04.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் சின்னத்தம்பி செல்லையா - திருமதி பாக்கியம் செல்லையா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தர்மலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதிகளின் மருமகனும் சந்திரஜோதியின் அன்புக் கணவரும் துளசி (கனடா), தக்ஷை (மாணவி, A/L 2004 வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் திருமதி அமிர்தம் பொன்னுத்துரை, திருமதி சிவசோதி பூபாலசிங்கம், காலஞ்சென்ற இராசையா மற்றும் திருமதி அருள்சோதி சொரூபானந்தன் ஆகியோரின் அருமைச் சகோதரரும் செல்லையா நடராசா (O.A) அவர்களின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2003) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காட்டு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"நந்தனம்"*
*ஞானவைரவர் கோவில் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.* (17041)
தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## திருமதி தியாகராசா அன்னலட்சுமி

மீசாலை கிழக்கைச் சேர்ந்த திருமதி தியாகராசா அன்னலட்சுமி அவர்கள் நேற்று (20.04.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தியாகராசாவின் (சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம்) அன்பு மனைவியும் ஹம்சவாஹினியின் பாசமிகு தாயாரும் ஏரம்பு, பொன்னம்பலம், செல்லத்துரை, காலஞ்சென்ற யோகநாதன், பொன்னம்மா, இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மாவதி, செல்வராணி, மகாலட்சுமி, சிவயோகலட்சுமிதேவி, சதாசிவம், காலஞ்சென்ற கோபாலபிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2003) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிற்றம்பலம் வீதி,*
*மீசாலை கிழக்கு,*
*மீசாலை.* (17039)
தகவல்: க.பொ.சதாசிவம் (மைத்துனர்)

## கந்தையா இராமச்சந்திரன்

*(இளைப்பாறிய R.V.D.P. உத்தியோகத்தர்)*

நல்லூர், மூத்த விநாயகர் வீதியைப் பிறப்பிடமாகவும், தட்டான் தோப்பை வதிவிடமாகவும் தற்போது நல்லூரில் வசிப்பவருமாகிய கந்தையா இராமச்சந்திரன் 20.04.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - ஞானப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அன்னலட்சுமியின் அன்புச் சகோதரனும் சிவசெந்தில்மதி, சிவதாசன் (பிரான்ஸ்), செல்வமதி (டென்மார்க் - சுவிஸ்), சுமதி (பிரான்ஸ்), சுதாமதி (யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப்பீட 2ஆம் வருட மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசலிங்கம் (லண்டன்), புவனேந்திரராஜா (சுவிஸ்), சர்மதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் துஷ்யந்தி, பிரசாந்தி, சுபேந்தினி, கயந்தன், தர்சன், சுலச்சன், நிதுர்சன், கிருஷ்ணிகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.04.2003) திங்கட்கிழமை இல.64, நல்லூர் குறுக்கு வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் முற்பகல் 11 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*இல.64, நல்லூர் குறுக்கு வீதி,*
*நல்லூர்.* (17038)
தகவல்: சிவசெந்தில்மதி (மகள்)

# முஸ்லிம் காங்கிரஸின் உண்மை நிலை என்ன? தெளிவுபடுத்துகிறார் ரிசாத் பதியுத்தீன்

புத்தளம்,ஏப்.21

ஐக்கிய தேசிய முன்னணி அரசை வீழ்த்தி அரசியல் இலாபம் தேடும் எண்ணம் முஸ்லிம் காங்கிரஸுக்குக் கிடையாது. அரசு, முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அவர்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கவேண்டும். தவறினால் ஜனநாயக ரீதியில் முஸ்லிம் காங்கிரஸ் போராட்டம் நடத்தும். மற்றொரு தேர்தலைச் சந்திக்கவும் முஸ்லிம் காங்கிரஸ் தயார்.

மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார் ரிசாத் பதியுதீன் எம்.பி.

அவர் எச்.எம்.ஹரீஸ், அன்வர் இஸ்மாயில், தமர் தௌபீக், எம்.எஸ். தௌபீக் முதலானோர் சகிதம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் மூதூரில் தங்கியிருந்துவிட்டுத் திரும்பியிருக்கிறார். திரும்பியதும் எல்லோர் சார்பிலும் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். அதிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுப்பது முஸ்லிம் காங்கிரஸின் கடமை. எந்தவிதமான தடைகள் வந்தாலும், எப்படிப்பட்ட சோதனைகள் ஏற்பட்டாலும் முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு முஸ்லிம் காங்கிரஸ் வழிசெய்யும். அவர்களின் உரிமைகளை எப்படியும் பெற்றுக்கொடுத்தே தீரும்.

இதைத் திட்டவட்டமாகத் தெரிந்துகொண்டதால்தான் தீயசக்திகள் முஸ்லிம் காங்கிரஸைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியுள்ளன. முஸ்லிம் காங்கிரஸின் முயற்சிகளைக் கொச்சைப்படுத்தி அதற்கு அபகீர்த்தி ஏற்படுத்துவதிலும் முயன்றுகொண்டிருக்கின்றன. அவற்றால் முஸ்லிம் காங்கிரஸை ஒன்றும் செய்யமுடியாது;தடுத்து நிறுத்தவும் இயலாது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூதூருக்கு நேரில் வந்து நிலைமைகளை அவதானித்து முஸ்லிம்கள் உட்பட எல்லா இனமக்களும் அச்சமின்றி நிம்மதியாகவும் பாதுகாப்பாகவும் வாழ வழிசெய்யவேண்டும் அங்கே இயல்புநிலை, திரும்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றே ரவூப் ஹக்கீம் வற்புறுத்தினார்.

இதில் அரசுக்கு என்ன அச்சுறுத்தல் இருக்கிறது? முஸ்லிம் காங்கிரஸுக்கு என்ன அரசியல் இலாபம் கிடைக்கப்போகிறது என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் ரிசாத் பதியுதீன். (ஐ)

வவுனியாவில் தொடரும்

# புலிகள் – படையினர் முரண்பாடு ஆராய இன்று கலந்துரையாடல்

## கண்காணிப்புக் குழுவும் பங்கேற்கும்

வவுனியா,ஏப்.21

வவுனியாவில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கென படையினர் -விடுதலைப் புலிகள்- கண்காணிப்புக் குழு என முத்தரப்பினர் பங்குகொள்ளும் கலந்துரையாடல் ஒன்று, இன்று வவுனியாவில் இடம்பெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் தமது நிகழ்வுகளை பாடசாலைகளில் நடத்தும்போது கல்வித் திணைக்களத்தில் முன்அனுமதி பெறுவதில்லை என்று படைத்தரப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் நிகழ்வுகளை ஊடகவியலாளர் என்ற போர்வையில படையினரின் புலனாய்வுப்பிரிவினர் வீடியோப்படம் எடுக்கின்றனர் என விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்த விடயங்கள் உட்பட பல்வேறு விடயங்களில் இரு தரப்பினருக்கும் இடையில் உருவாகிவரும் முரண்பாடுகளுக்கு தீர்வுகாணும் நோக்குடன் இன்றைய சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய சந்திப்பில் படைத்தரப்பில் வன்னி கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் சந்திரபாலவும், விடுதலைப் புலிகளின் சார்பில் வவுனியா அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனும் கலந்துகொள்வர். (எ-3-164)

# இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பங்களாதேஷில் உற்சாக வரவேற்பு

டாக்கா,ஏப்.21

இரண்டு நாள்கள் உத்தியோக பூர்வப் பயணமாக பங்களாதேஷ் சென்றுள்ள இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு டாக்காவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அந்நாட்டுப் பிரதமர் பேகம் கலீதா ஸியாவுடன் ஜனாதிபதி சந்திரிகா முக்கிய ஆலோசனை நடத்தினார்.

தலைநகர் டாக்காவில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பங்களாதேஷ் ஜனாதிபதி இயாவூதீன் அகமது, பிரதமர் பேகம் கலீதா ஸியா ஆகியோர் அன்புடன் வரவேற்றனர். இராணுவ மற்றும் அரசு உயர் அதிகாரிகளும் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர். ஜனாதிபதி சந்திரிகாவுக்கு 21 மரியாதைக் குண்டுகள் முழங்க உற்சாகமான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

பின்னர், பிரதமர் பேகம் கலீதா ஸியாவுடனும் இதர முக்கிய தலைவர்களுடனும் ஜனாதிபதி சந்திரிகா ஆலோசனை நடத்தினார்.

இருநாட்டு உறவுகள், வர்த்தக ஒத்துழைப்பு, பிராந்தியப் பிரச்சினைகள், சர்வதேச பிரச்சினைகள் உட்பட பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்து பங்களாதேச பிரதமருடன் சந்திரிகா ஆலோசனை நடத்தினார். 'சார்க்' அமைப்பு குறித்தும் இருவரும் விரிவாக ஆராய்ந்தனர். (ஐ)

## சமயசந்நிதிகளில்

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய் அங்கணம்மைக் கடவை கண்ணகை அம்மன் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9.22 மணிமுதல் 10 மணிவரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை மாலை கர்மாரம்பம், பிம்பஸ்தானத்துடன் ஆரம்பமாகும். நாளை செவ்வாய்க்கிழமை காலை 7மணிமுதல் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (எ)

## - கலைவிழா

தொல்புரம் திருநாவுக்கரசு நாடக மன்றம் நடத்தும் கலைவிழா இன்று திங்கட்கிழமை மாலை 7 மணிக்கு நடைபெறும். வழக்கம்பரை அம்மன் கோயில் மோகன் அரங்கில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலாபூஷணம் கணபதிப்பிள்ளை கலந்துகொள்வார். (ஐ-15)


யா/சிதம்பரக் கல்லூரி - வல்வெட்டித்துறை

**வாழ்த்துகின்றோம்**

க.பொ.த (சா.த.) பரீட்சை - 2002

க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதிபெற்றோர்

| | | | |
|---|---|---|---|
| 7A உடன் | கு.ஜானகி | 3A உடன் | க.பிறேம்நாத் |
| 5A உடன் | சி.அருச்சுனன் | 2A உடன் | த.சுயித்தா |
| | வி.நிசாந்தன் | | சி.சிவனேஸ்வரன் |
| 4A உடன் | த.குருபரன் | 1A உடன் | செ.சிவராகவன் |
| | | | அ.ஜெயந்திரன் |

சித்திபெற்ற ஏனைய இருவர் - தி.சிவானந்தா, பொ.சிவரூபன்

முதன்முறை பரீட்சைக்குத் தோற்றியோர் - 20

உயர்தர வகுப்பிற்குத் தகுதி பெற்றோர் - 11

மேற்படி மாணவர்களையும் உயர்வான பெறுபேறுகள் கிடைப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும் அதிபர், ஆசிரியர்களையும் உளமார வாழ்த்துகின்றோம்.

*வல்வெட்டித்துறை.* (17047) பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யா/சிதம்பரக் கல்லூரி.


# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 07 - 01 - 1982



விண்ணில் 01 - 05 - 2002

## செல்வன் கந்தசாமி தினேஷ் *(தீபன்)*

அன்னிய நாடு செல்ல நினைத்தாயோ?
அரைவழியில் யமன் வந்தானோ?
தீபமாக எமது குடும்பத்தில் ஒளி கொடுத்தாயோ?
தீடீரென தீபம் அணைந்ததோ?
எண்ணியும் பார்க்கவில்லை இதயத்தில்
இடிபோல ஏங்க வைத்தாயோ?
ஆண்டு ஒன்றாகி விட்டதே - ஆனாலும்
நெஞ்சம் அணையவில்லையே!

*அரசடி லேன், திருநெல்வேலி கிழக்கு.* (17044) - குடும்பத்தினர்.


லஷ்சுமி இணுவில்
CROUCHING TIGER HIDEN DRAGON
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (புதியநேரம்)
இன்று முதல்
மூன்று தினங்களுக்கு மட்டும்.
பயங்கர கராட்டி சண்டை நிறைந்த படம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், சிநேகா நடித்த
வசீகரா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
JURASSIC PARK - 3

விபேட்டி அச்சுவேலி
மாதவன், ஜோதிகா, விவேக் நடித்த
டும் டும் டும்
குடும்பச் சித்திரம்
காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)
(C/27479) T.P.: 070 212223

ராஜா யாழ்ப்பாணம்
சரத்குமார் (இருவேடம்), சிம்ரன், ரோஜா, வடிவேல் நடித்த
அரசு
10.30, 2.30, 6.30, 9.30

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
அஜித், சிம்ரன், சுஜாதா நடித்த
அவள் வருவாளா
காட்சிகள் தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே.)


# மரண அறிவித்தல்கள்

## நடராஜா திருக்கேதீஸ்வரன்

*(ஒற்றைக்கால் வரன் - பருத்தித்துறை)*

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா திருக்கேதீஸ்வரன் (வரன்) 18.04.2003 அன்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - கனகம்மா ஆகியோரின் அன்பு மகனும் நவரத்தினராசா (டென்மார்க்), சிதம்பரநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2003) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு கற்கோவளம், உதயணன் தோட்டம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை கோரியடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'உதயணன் தோட்டம்' கற்கோவளம், பருத்தித்துறை.* (C-27502)

தகவல்: பொ.இராசதுரை (மைத்துனர்) (ராஜன் சைக்கிள் வேக்ஸ்) பருத்தித்துறை.

## செல்வி சபீனா புஸ்பராசா

*(கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை - தரம் 4)*

சங்கானையைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சபீனா புஸ்பராசா நேற்று (20.04.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் புஸ்பராசா (புகழ் ஸ்ரோர்ஸ், சுன்னாகம்) - அன்னராணி தம்பதிகளின் மகளும் சஞ்செயன் (யாழ். இந்துக் கல்லூரி), சயனியா (கொக்குவில் இந்துக் கல்லூரி), சகானா (வேம்படி மகளிர், உயர்தரப் பாடசாலை), கயமுகன் (கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2003) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.* (17046)

தகவல்: ந.புஸ்பராசா (தந்தை) (புகழ் ஸ்ரோர்ஸ்).

## சின்னத்தம்பி முருகேசு கந்தையா

தெல்லிப்பழை மேற்கைப் பிறப்பிடமாகவும் இல. 220,கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி முருகேசு கந்தையா (இராசையா) அவர்கள் 19.04.2003 சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் சென்.ஜோசப் கல்லூரியின் (பண்டாரவளை) முன்னாள் ஆசிரியரும் சென்.மேரிஸ் தமிழ் வித்தியாலயம் (பண்டாரவளை), கொஸ்லந்த தமிழ் மகா வித்தியாலயம், ஊவா ஹய்வன்ஸ் மகா வித்தியாலயம் (பண்டாரவளை), யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் அதிபரும் ஆவார்.

அன்னார் பாக்கியத்தின் அன்புத் துணைவரும் (இளைப்பாறிய ஆசிரியை யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), திரிகரன் (செல்வம் - பொறியியலாளர், ஜாஎல), திவாஜினி (திவா - லண்டன்) ஆகியோரின் அருமைத் தந்தையும் பார்த்திபன் (சுந்தா - சாட்டற் எக்கவுண்டன், லண்டன்), பிறேமரஞ்சனி (பிறேமி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், விஷ்னி, ஹரினி ஆகியோரின் அன்புப் பேரனும் சிவபாக்கியம், காலஞ்சென்ற கண்மணி அம்மா மற்றும் நல்லம்மா, இராசம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை, பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை), பார்வதியம்மா, காலஞ்சென்ற முருகையா (புகையிரதப் பகுதி) மற்றும் குணரத்தினம் (M.O.H. - ஜெயபுரம்), பூமணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற செல்லப்பா, காலஞ்சென்ற கண்மணி மற்றும் ஐயாத்துரை, முத்தையா, தனபாலசிங்கம், அருந்தவதேவி, பரமேஸ்வரி, சிங்கராசா, காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் இராசம்மா, செல்லையா, சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் தங்கச்சிட்பிள்ளை, முருகேசு, குலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2003) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*இல.220 கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.* (17050)

தகவல்: க.திரிகரன் (செல்வம் - மகன்)

## சபாபதிப்பிள்ளை மகாலிங்கம்

சாவகச்சேரி, கற்குழியைப் பிறப்பிடமாகக் கொண்ட சபாபதிப்பிள்ளை மகாலிங்கம் நேற்று (20.04.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் அமுதலிங்கம் காலஞ்சென்ற சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இரத்தினலிங்கம் (இந்தியா), தவலட்சுமி (சுவிஸ்), ஜெயலட்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற அருட்பிரகாசம் மற்றும் இராசலட்சுமி (பிரான்ஸ்), விஜயலட்சுமி (லண்டன்), கணேசரத்தினம் (லண்டன்), சீதாலட்சுமி ஆகியோரின் தந்தையாரும் தையல்நாயகி (இந்தியா) காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் பத்மநாதன் (பிரான்ஸ்), யோகேஸ்வரி நவரட்ணம் (பிரான்ஸ்), குணராசா (லண்டன்), சுமதி (லண்டன்), இலட்சுமிகாந்தன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2003) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1.00 மணிக்கு கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் ஒழுங்கை, கற்குழி, சாவகச்சேரி.* (17052)

தகவல்: பிள்ளைகள், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## திருமதி சிவநாயகி கந்தசாமி

செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் சின்னப் புதுக்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவநாயகி கந்தசாமி நேற்றுமுன்தினம் (19.04.2003) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - சின்னம்மா தம்பதிகளின் மகளும் கந்தசாமி (சின்னத்தம்பி)யின் அன்பு மனைவியும் தவநாயகி, சாந்தநாயகி (கனடா), சிவகந்தரூபன் (கனடா), செந்தூரநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும் தர்மலிங்கம், சசிவதனி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2ஆவது ஒழுங்கை, சின்னப்புதுக்குளம், வவுனியா. T.P. 0776040543* (17051)

தகவல்: சிவகந்தரூபன் (மகன்).

## மூதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கம் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பரஸ்பர புரிந்துணர்வை வளர்க்கும் நோக்குடன் முஸ்லிம் தலைவர்கள், தமிழ்க் கூட்டமைப்பினர், படை அதிகாரிகள் கொண்ட உயர்மாநாடு ஒன்று, இன்று இடம்பெறவுள்ளது.

இயல்பு நிலையை ஏற்படுத்த முஸ்லிம் சமயப் பிரமுகர்களுக்கும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கும் இடையில் சமரச முயற்சி ஒன்றுமுன்னெடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கிடையில் -

நேற்று மூதூர் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்றில் இருவர் காயமடைந்துள்ளனர். இவர்கள் இருவரும் சிகிச்சைக்காக திருமலை வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அதேசமயம் - நேற்று மாலை இறால்குழியில் இனந்தெரியாத நபர் ஒருவர் சுட்டதில், முனாஸ் என்ற மீனவர் காயமடைந்தார். சிகிச்சைக்காக அவர் திருகோணமலை அரசாங்க வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். (ஐ-3)

## ஜமாலியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலீஸார் நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. ஜமாலியாவைச் சேர்ந்த இக்பால் இரோசன், இக்பால் அபான், ஏ.ஆர்.கே. முஹமட் ஆகியோர் காயமடைந்தவர்களில் அடங்குவர்.

இச்சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தனிப்பட்ட குரோதமே இந்த மோதலுக்குக் காரணம் எனவும் திருமலை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் தயா சமரவீர தெரிவித்தார். இதேசமயம், ஜமாலியா சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் சில தமிழர்கள் தாக்கப்பட்டதாக ஒரு தகவல் தெரிவித்தது. (ஐ-3)

## போர் மூண்டால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைப் புலிகள் தன்னிச்சையாக மீண்டும் போரினை ஆரம்பித்தால் சர்வதேச நாடுகள் பல இலங்கை அரசிற்கு உதவியளிக்கும் குறிப்பாக இந்தியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் உதவிகளை வழங்குவதற்கு முனவரும் இதற்காக அந்த நாடுகள் ஏற்கனவே உத்தரவாதமும் அளித்துள்ளன - என்று பீரிஸ் தெரிவித்தார்.

## கிளிநொச்சியில் மின்னல் தாக்கி சிறுவன் மரணம்!

கிளிநொச்சி,ஏப்.21

கிளிநொச்சி அக்கராயன், ஸ்கந்தபுரத்தில் மின்னல் தாக்கியதில் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துளளான் என்று 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

நேற்றுப் பிற்பகல் 3.45 மணியளவில் ஸ்கந்தபுரம் முருகன் கோவிலுக்கு அருகில் உள்ள தென்னைமரம் ஒன்றின் மீது மின்னல் தாக்கியதில் கருணாகரன் என்ற 15 வயதுச்சிறுவன் உயிரிழநதுள்ளான் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-12)

## கூட்டமைப்பினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொறுப்பாளர் திலக் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

அமைதி வழியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இன்று ஆரம்பமாகும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையை மூதூர் கிழக்குப் பகுதியில் சுமுகமாக நடத்துவது பற்றியும் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

(ஐ-3)

## கடற்புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தானிப்பதற்கு அனுமதிப்பது -

இதேபோல கடற்படையினர் தமது கடற்பரப்பில் சுடுகலன் பயிற்சியில் ஈடுபடும்போது கடற்புலிகள் சிலர் பார்வையாளர்களாக வந்து பயிற்சியை அவதானிப்பதற்கு அனுமதி வழங்கல் - கடற்படையினரோ அல்லது கடற்புலிகளோ கடற்பரப்பில் தீவிர தற்காப்புத தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவது தவிர்க்கப்படவேண்டும் -

கடற்பரப்பில் கடற்படையினரதோ அல்லது கடற்புலிகளினதோ நடமாட்டம் குறைந்தது ஒரு கடல்மைல் இடைவெளியைக் கொண்டதாக இருக்க வேண்டும் -

ஆகிய சிபாரிசுகள் அதில் அடங்கியுள்ளன.

கடற்புலிகளை இலங்கை அரசு அங்கீகரித்து புரிந்துணர்வு உடன்படிக்கையின் சுமுகமான அமுலாக்கத்துக்கு உதவ வேண்டும் என்று தெரிவித்துள்ள யோசனை பாதுகாப்புப்படை வட்டாரங்களில் பல்வேறு சர்ச்சையைத தோற்றுவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

கடற்புலிப்படைக்கு தனியான கடல் பகுதி ஒதுக்கி வரையறுப்பதும் அவர்களைப் புலிகளின் படை அணிகளில் ஒன்றாக அங்கீகரிப்பதும் எதிர்காலத்தில் பல சிக்கல்களுக்கு வழிவகுக்கும என்று சந்தேகம் எழுப்பப்பட்டிருக்கின்றது. இதனால், இந்த யோசனையை அரசகுழு நிராகரிக்கலாம் என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## சுமுக நிலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்தினம் திருமலையில் நடத்தினார்.

புனர்வாழ்வு அமைச்சின் உதவியுடன் உலக உணவுத்திட்டத்திடமிருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் திருமலைக்குத் தருவித்து பாதிப்புற்றோருக்கு விநியோகிப்பதற்கான பணிப்புரைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அவர் விடுத்தார்.

இந்த உயர்மட்டக் கலந்துரையாடலில் திருமலை அரச அதிபர் நெலும் தென்னிய, மேலதிக அரச அதிபர் எம். றியான், எம்பிக்களான எம்எஸ்தௌபீக், அன்வர் இஸ்மாயில், ரிஷாத் பதியுதீன் மற்றும் 'ரேப்பியா' நிறுவனத்தின் தலைவர் ஏ.எம்.பாயிஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இப்படி அந்த ஊடக அறிக்கை மேலும் தெரிவித்தது.

இதேவேளை மூதூர், தோப்பூர் முதலிய பகுதிகளில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கான நிவாரணப் பணிகளை மீளாய்வு செய்யும் உயர்மட்டக் கூட்டம் இன்று திருமலை மாவட்டச் செயலகத்தில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருமலை அரச அதிபர், மூதூர் பிரதேச செயலாளர் மற்றும் கிழக்கு அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொள்ளும் இக்கூட்டத்திற்குப் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மற்றும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அங்கத்தவர்களையும் அழைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஐ)

## டாக்டர் கெங்காதரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வத்துறையில் தனது ஐம்பது வருட சேவையைப் பூர்த்தி செய்கின்றார். இவர் தனது சேவைக் காலத்தில் மனித விழுமியங்களின் உச்சத்தைத் தொடும் வகையில் எமது மக்களுக்கு வைத்தியசேவை ஆற்றிவந்துள்ளார் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

மனித வரலாற்றில் வைத்தியசேவை என்பது மிகவும் மகோன்னதமானது. இந்தச் சேவையில் கடமையாற்றியவர்களில் பலர் சேவையின் உச்சத்தினைத் தொட்டுத் தடம் பதித்துள்ளார்கள். அவ்வாறானவர்களுக்குச் சற்றும் சளைக்காதவகையில் வைத்தியர் கெங்காதரனும் அச்சேவையை ஆற்றியுள்ளார்.

எமது மக்கள் இடம்பெயர்ந்து இன்னலுற்று மருந்துத் தடைகாரணமாகவும் வைத்தியர் பற்றாக்குறை காரணமாகவும் அல்லற்பட்டபோது இரவுபகல் நேரம் காலம் பாராது சேவை புரிந்தவர் கெங்காதரன். இப்போதும் தொடர்ந்து சேவையாற்றியும் வருகின்றார். நெருக்கடி மிக்க காலத்தில் வன்னியில் பலவீனமுற்றிருந்த வைத்திய சேவை பலம்பெற இவரும் உறுதுணையானார்.

இவரது சேவை என்றென்றும் பாராட்டிற்குரியது. தமிழ்மக்களின் வரலாறு என்றென்றும் நன்றியோடு இவரது சேவையை நினைவுகூரும்.

- இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்குடாநாட்டில் நீண்ட காலமாக மருத்துவ சேவை புரிந்து வந்தவர் கெங்காதரன். 1995 ஆம் ஆண்டின் இடப்பெயர்வுக்குப் பின்னர் அவர் தனது சேவையை வன்னிப் பகுதியில் தொடர்ந்து மேற்கொண்டு வந்தார். (ஐ-12)





கொழும்பு, விவேகானந்த சபையின் நூற்றாண்டு விழா நேற்று நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் சுவாமி விவேகானந்தரின் உருவப்படம் நல்லூர் கந்தசுவாமி ஆலய வீதி வழியாக விழா மண்டபத்துக்கு எடுத்துவரப்படுவதை முதல் படத்தில் காணலாம்.

விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றுவதையும், விழாவில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படம்: ரமணன்)


### தேவை

பேக்கரித் தொழிலில் பாஸ்தரத்தில் அனுபவம் உள்ளவர்களும், உதவியாளர்களும் தேவை. நேரில் வரவும்.

**றொலெக்ஸ்,**
*118, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
(17048)

**NEW SCIENCE COLLEGE**
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
இணைந்த கணிதம் (A/L 2004)
PAPER CLASS
Tue. - 4.00 - 6.00 (p.m.) (ப.நே.)
ஆரம்பம் : 22.04.2003
ஆசிரியர் :
ப.செந்திில்நாதன் (B.Sc.)

**LIONAIR**
LANKA'S PRIDE IN THE SKY
யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்
பாதுகாப்பான – சௌகரியமான பயணம்
★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.
பதிவுகளுக்கு :
லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்
யாழ்ப்பாணம்
# 1-T, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021-222 6026 HOTLINE: 0777-382343
021-222 6035 072-401423
(C/27281)

**BARATHY**
சித்தன்கேணி
நீங்கள் சித்தன்கேணியில் பிரபல்யம் பெற்ற கல்வி நிறுவனத்தில் கற்பதில் பெருமைகொள்வீர்கள்.
எங்கு படிக்கவேண்டும்? எந்த ஆசிரியரிடம் படிக்கவேண்டும்?
நீங்களே தீர்மானியுங்கள்
A/L 2005
கலை, வர்த்தகப்பிரிவுகள் புதிய பிரிவு ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
யாழ்.ஆசிரியர் குழுவினால்
பொருளியல் – மகேந்திரன்
வணிகக்கல்வி – பசில்
கணக்கீடு – முகுந்தன்
அளவையியல் – R.P.சர்மா
தமிழ் – பாலா
இந்துநாகரிகம் – சுரேஸ்
இந்துசமயம் – தரன்
புவியியல் – குமரன்
நாடகமும் அரங்கியலும் – J.சுதன்
வரலாறு – M.சுதன்
கிறிஸ்தவம் – வசந்தன்
அரசியல் – றஜீவன்
ஆங்கிலம் – பிரபல ஆசிரியர்
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
(C/27192)

### விற்பனையாகின்றது
பொதுச் சாதாரண பரீட்சை வழிகாட்டி நூல்
★P.கமல்தாசன் & P.உமாசங்கர்
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா, சுப்பிரமணிய, துர்க்கா, சிதம்பரப்பிள்ளை, அறிவமுது.

புதிய வீடியோ CD வெளியீடு
சாய்குமார் நடித்த
சென்னை பந்த்
விஸ்ணு வீடியோ
கோண்டாவில்.
வடமராட்சி வாடிக்கையாளர்களுக்கு
சோலை வீடியோ, பிரதான வீதி, நெல்லியடி.
(C/27301)

### இடம் மாற்றம்
ஜனா மருத்துவ நிலையம் ஜெயபுரம்
என்னும் முகவரியில் இயங்கிவந்த மேற்படி மருத்துவ நிலையம் தற்போது
ஜனா மருத்துவ நிலையம்
காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி
என்னும் முகவரியில் இயங்கிவருகின்றது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
(17040) - நிர்வாகம்.


### மரண அறிவித்தல்

**திருமதி சுந்தரமூர்த்தி இராசம்மா**

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சுந்தரமூர்த்தி இராசம்மா நேற்று (20.04.2003) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தியின் (தொலைத்தொடர்புத் திணைக்களம்) அன்பு மனைவியும் புஸ்பவதி (லண்டன்), காலஞ்சென்ற புஸ்பராணி, சிறீஸ்கந்தராஜா (லண்டன்), காலஞ்சென்ற வாசு புஸ்பமனோகரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் Dr.கணேசையா (லண்டன்), சண்முகநாதன் (ஆஸ்திரேலியா), Dr.கந்தசாமி (லண்டன்), சிவம் ஆகியோரின் மாமியாரும் நந்தீஸ், தாரணி, ஆரணி, றஸ்மி, நிரோசன், நிதர்சன், நிலக்சன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.04.2003) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு சண்டிலிப்பாயிலுள்ள அவரது உறவினர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிப்பிலி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சீரணி,* தகவல்:
*சண்டிலிப்பாய்.* (17054) கணேசமூர்த்தி சசிதரன்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.